Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீமுருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY TRANSFER | SM வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம்
20 நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம்
கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk (சி-2014)
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 04 (27.01.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:118

## சர்வதேச சமூகத்தின் அழுத்தத்துக்குப் பணிகின்றனர்

# ஜனாதிபதி - பிரதமர் இன்று சந்திப்பு;

# அரசியல் முறுகலுக்கு விரைவில் தீர்வு!



### மூன்று வாரங்களுக்குள் புலிகளுடன் பேச்சு

(கொழும்பு)

**சர்வதேச நிதியுதவிகள் தடைப்படும் ஆபத்துத் தோன்றியிருப்பதால் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமக்கிடையிலான அரசியல் முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் - இந்த அதிகார இழுபறிநிலைக்கு விரைவில் தீர்வுகாணப்படும் சூழ்நிலை உருவாகியிருப்பதாகவும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் -

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான அரசியல் கருத்து வேறுபாடுகள் விரைவில் தீர்க்கப்பட்டுவிடும் என்று உறுதிபடத் தெரிவித்தார்.

அத்துடன் ஜனாதிபதி - பிரதமருக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீர்க்க அமைக்கப்பட்ட மனோ - மலிக் குழுவின் பேச்சுக்கள் சாதமாகச் (12 ஆம் பக்கம் பார்க்க)



### விறகு வெட்டச் சென்றவர் குண்டு வெடித்து காயம்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கின் - மணல்காட்டுப் பகுதியிலுள்ள கண்டல் காட்டுப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற பொதுமகன் ஒருவர் குண்டுவெடிப்பில் சிக்கி நேற்றுப் படுகாயமடைந்தார்.

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த பாரிபாஸ் அசோகானந்தா (வயது24) என்பவரே குண்டு வெடிப்பில் சிக்கி படுகாயமடைந்தவராவார். பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இவரது காலொன்று முழங்காலுடன் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவருடன் கூடச்சென்றிருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

### புதுடெல்கியில் நடைபெறும்

## ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் கதிர்காமரும் முக்கிய உரை!

(கொழும்பு)

இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் புதுடெல்கியில் நடைபெறும் ஆசியப் பிராந்திய பாதுகாப்பு மாநாட்டில், ஜனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு கற்கைகள் மற்றும் ஆய்வு நிறுவனம் ஆறாவது ஆசிய பிராந்திய பாதுகாப்பு மாநாட்டை நடத்தவுள்ளது. "ஐக்கிய நாடுகள், பல்தரப்பு உறவு, சர்வதேச பாதுகாப்பு" என்ற தொனிப்பொருளில் இந்த வருடத்துக்கான மாநாடு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### வெள்ளைப்பூரான் கடித்து கெருடாவில் யுவதி மரணம்

(வடமராட்சி)

வெள்ளைப்பூரான் கடிக்கு இலக்காகி இளம் பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் கெருடாவில் - தொண்டமனாறு பகுதியில் இடம்பெற்றது. கெருடாவிலைச் சேர்ந்த ஜீவரட்ணம் சுதந்தினி (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு படுக்கைக்குச் சென்றபோது வெள்ளைப்பூரான் கடிக்கு இலக்கான இவர், நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புதிதாக உருவான கூட்டணியால் யுத்தநிறுத்தம் சிக்கலுக்குள்ளாகும்!

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் கூட்டணியால் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கும், அதிகாரப் பரவலாக்கலுக்கும் சிக்கல் தோன்றக்கூடிய நிலை தென்படுவதாக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அந்தந்த மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்துகொடுக்க தயாராகவிருக்கின்ற அதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவருகின்றது.

மாகாணசபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களை வழங்குவதற்கே மக்கள் விடுதலை முன்னணி இணங்கியிருந்தது. பொதுவான கொள்கைகளில் இருகட்சிகளுக்கிடையில் பாரிய வேறுபாடுகள் இருப்பதாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி பதவிக்கால சர்ச்சை; விளக்கம் கோரும் மனு நிராகரிப்பு!

(கொழும்பு)

இரண்டு பதவிக் காலங்களுக்காக ஜனாதிபதி சந்திரிகா மூன்று தடவைகள் பதவிப் பிரமாணம் செய்துகொண்டமை தொடர்பாக ஏற்பட்டுள்ள குழப்பநிலை குறித்து சட்டபூர்வ விளக்கமளிக்குமாறு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை - பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என நிராகரித்துள்ளார்.

சட்டத்தரணி பி.தர்மதாச தாக்கல் செய்திருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அத்துருகிரிய தேடுதலுடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள்மீதும் நடவடிக்கை!

### பொலிஸ் மா அதிபர் ஆராய்வு

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இராணுவ மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதலில் சம்பந்தப்பட்ட பொலிஸாரின் விபரங்கள் குறித்து பொலிஸ்மா அதிபர் தகவல்களைச் சேகரித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இந்தத் தேடுதல் நடவடிக்கைக்கு தலைமை தாங்கிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல தொடர்பான விபரங்களும் ஆராயப்பட்டுவருவதாகக் கூறப்படுகின்றது.

கண்டிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு, பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வா விடுத்துள்ள உத்தரவில், இந்த வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்களைத் தம்மிடம் உடனடியாகச் சமர்ப்பிக்கும்படி கேட்டிருக்கிறார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக விரைவில் ஒழுங்கு நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே பொலிஸ் மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக, உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு - உதவிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பெற்றோலின் விலை 2 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோலின் விலை நேற்று நள்ளிரவு முதல் 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி, 53 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவந்த பெற்றோல் 55 ரூபாவாகவும் 55 ரூபாவாக விற்பனைசெய்யப்பட்டுவந்த சுப்பர் பெற்றோலின் விலை 57 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
(சி-2009) email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# ஜி.ரி.இசற், நிகொட் நிறுவனங்களின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் மூன்று நாள் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

ஜி.ரி.இசற், நிகொட் நிறுவனங்களின் ஏற்பாட்டில் அடுத்தமாதம் ஆறாம் திகதி முதல், மூன்று தினங்களுக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், கட்டட ஒப்பந்தகாரர்களுக்கான விசேட பயிற்சிப் பட்டறை ஒன்று இடம்பெறவுள்ளது.

முதற் தடவையாக யாழ்.மாவட்டத்தில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வானது - யாழ்.மாவட்ட வர்த்தக கைத்தொழில் மன்றத்தில் இடம் பெறவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடனும், உலக வங்கியின் உதவியுடனும் இடம்பெறவிருக்கும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இந்தப் பயிற்சிப் பட்டறையில் ஆராயப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் - ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான விதிவிடப் பிரதிநிதி ஜோண் குனி மற்றும் நிகொட் நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் இலங்காநேசன் மற்றும் இலங்கைக்கான ஜி.ரி.இசற் நிறுவன இணைப்பாளர் இங்கோ குறூ ஆகியோர் விசேட பிரதிநிதிகளாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவர்களுடன் - யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் இக்ராட் நிறுவனப் பிரதிநிதிகள், சீமா அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டு மூன்று நாட்களும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 40 பேர் வரையில் கலந்துகொள்ளவுள்ளனர். தமிழிலேயே கருத்தரங்குகள் யாவும் இடம்பெறத்தக்கவகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## விரிவுரைகள் நாளை நடைபெறமாட்டாது

(யாழ்ப்பாணம்)

முகாமைக் கற்கைகள் வணிகபீட புகுமுக மாணவர்களுக்கு நாளை நடைபெறவிருந்த அறிமுக நிகழ்வும், விரிவுரைகளும் நடைபெறாது என்றும் - நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மேலும் சில மாணவர் விபரம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் நல்லூர் சென்.பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் இம்முறை ஏழு பேர் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த மாணவர்களின் விபரம் வருமாறு-

தி.தாரணி (149), ம.சோபிதா (137), வினோதினி (136), தே.பகீரதன் (131), தெ.அபிராமி (121), ஜெ.யுகப்பிரியா (120), தி.தனுசிகா (118) ஆகிய மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (55)

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தீவக கல்வி வலயத்தில் தமிழ், ஆங்கில பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை ஆசிரியர் தரம் 2-11, 2-1, 1 ஐச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர், தமது விண்ணப்பங்களை தீவக வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு, வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

# சனசமூக நிலையத் தெரிவுகளை பெப்ரவரி 29 இற்கு முன் நடத்துக!

## மாவட்ட தலைமை சனசமூக நிலைய உத்தியோகத்தர்

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல சனசமூக நிலையங்களுக்குமான புதிய நிர்வாகசபைத் தெரிவை பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதிக்கு முன் நடத்துமாறு, யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த தலைமை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் க.இராமச்சந்திரா கேட்டுள்ளார்.

சனசமூக நிலையங்கள் அனைத்தும் தமது புதிய ஆண்டுக்கான பொதுக்கூட்டத்தினை நடத்த, எதிர்வரும் பெப்ரவரி 29 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சித் திணைக்களம், நகரசபை, பிரதேசசபை முதலியவற்றுக்கு தமது அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

அவ்வாறு புதிய ஆண்டுக்கான நிர்வாகசபை பற்றிய விபரம் கிடைக்கப்பெற்றாலே, கடந்த ஆண்டுக்கான சனசமூக நிலைய நன்கொடைகளை வழங்கமுடியும்.

ஏ தரத்து சனசமூக நிலையங்களுக்கு ஆயிரத்து 600 ரூபாவும், பி தரத்து சனசமூக நிலையங்களுக்கு ஆயிரத்து 400 ரூபாவும் சனசமூக நிலைய நன்கொடையாக வழங்கப்படவுள்ளன.

இவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடைய - பதிவுசெய்யப்பட்ட அனைத்து சனசமூக நிலையங்களையும் உடனடியாக தமது விபரங்களைத் தந்துதவுமாறு அவர் மேலும் கோரியுள்ளார். (ப)

# அரியாலைப் பகுதியில் இயங்கிய இரு பாடசாலைகள் மூடப்பட்டன

அரியாலை பூம்புகார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலைகள் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் மூடப்பட்டுள்ளன.

இந்த இரு பாடசாலைகளிலும் மாணவர்களின் வரவு மிகக்குறைவாக இருந்த காரணத்தினால், கல்வித் திணைக்களத்தின் உத்தரவின்பேரில், இந்த இரு பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த இரு பாடசாலைகளிலும் இதுவரை கல்வி பயின்ற மாணவர்கள் அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் இணைக்கப்பட்டுள்ளனர். இதே வேளை, இந்தப் பாடசாலைகளின் ஆசிரியர்களும், அதிபர்களும் இது வரையும் இடமாற்றம் செய்யப்படவில்லை.

கடந்தகால யுத்தம் காரணமாக, இந்தப் பாடசாலைகளின் சொந்தக் கட்டடங்கள் முற்றாகச் சேதமடைந்ததோடு, இந்தப் பகுதி மக்கள் வெவ்வேறு பகுதிகளில் இடம் பெயர்ந்து சென்றுள்ளதாலும், இங்கு வசித்த மக்கள் சிலர், தமது பிள்ளைகளை வேறு பாடசாலைகளில் சேர்த்துள்ளதாலுமே, இந்தப் பாடசாலைகளில் மாணவர் வரவு குறைவடைந்ததாக காரணம் தெரிவிக்கப்படுகிறது. (55)

## அலுவலகத் திறப்புவிழா

பச்சிலைப்பள்ளி கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலகம், நாளை காலை 9.30 மணிக்கு பளை நகரத்தில் புலோப்பளை வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் இடமபெறவுள்ளது எனப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

# 'வெளிச்சம்' இதழ் வெளிவந்துள்ளது

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தின் 'வெளிச்சம்' சஞ்சிகையின் 84 ஆவது இதழ் வெளிவந்திருக்கிறது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையின் ஒரு பகுதியுடன், மாலிகா, சித்தாந்தன், தீபா, குமரேஷ், மீரா பாலகணேசன், சு.வில்வரத்தினம், தானா விஷ்ணு, முல்லைக்கமல் ஆகியோரின் கவிதைகளும், என்.பி.ஆரதி, கு.லகஷ்மணன், க.வே.பாலகுமாரன், ஞானரதன், மலைமகள், நர்மதா, இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், த.பிரபாகரன், தி.தவபாலன், டி.சிவராம் ஆகியோரின் கட்டுரைகளும்,

கருணைரவி, அஜந்தி ஆகியோரின் சிறுகதைகளும் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றுடன் வின்சன்ற் புளோரன்ஸ், சாமிநாதன் விமல் ஆகியோரின் மொழிபெயர்ப்புக் கவிதைகளும்,

புதுவை இரத்தினதுரை, சமிந்த கிரிசாந்தகுமார, சஞ்சய பொன்சேகா, செல்வமனோகரன், அஜித் பரகும் ஜயசிங்க, ந.சத்தியபாலன் ஆகியோரின் சிங்கள - தமிழ் கலைக் கூடல் பற்றிய தொகுப்புகளும், தூது அஞ்சலி என்பனவும் இடம் பெற்றுள்ளன.

# நெடுந்தீவு பிரதேச செயலக மட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளின் இறுதிநாள் நிகழ்வுகள் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளன. நெடுந்தீவு பிரதேச உதவி அரசாங்க அதிபர் எஸ்.பேரானந்தன் தலைமையில் மாலை இரண்டு மணிக்கு இந்தப் போட்டிகள் ஆரம்பமாகவுள்ளன.

போட்டிகள் யாவும் நெடுந்தீவு மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்திலேயே நடைபெறவுள்ளன. இந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக ஊர்காவற்துறை பிரதேச உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தப் போட்டிகளின் அநேக விளையாட்டுப் போட்டிகள் இதற்கு முன்னரே நடைபெற்று முடிந்துள்ளன. தடகளப் போட்டிகள் மாத்திரமே இறுதி நிகழ்வின்போது நடைபெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

# அப்பலோ வைத்தியசாலை நிபுணர்களின் மாபெரும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம்

எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை இலவச மருத்துவ சிகிச்சைமுகாம் ஒன்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. கொழும்பு லயன்ஸ் கழக அனுசரணையுடன் யாழ். லயன்ஸ் கழகமும் அப்பலோ வைத்தியசாலை வைத்திய நிபுணர்களும் இணைந்து மாபெரும் சிகிச்சை முகாம் ஒன்றை நடாத்தவுள்ளனர். இச் சிகிச்சை முகாமில் அனைத்து நோய்களின் வைத்திய பிரிவுகளும் சிறப்பாக இருதயநோய் பிரிவும் அடங்கும். அத்துடன் கண்பரிசோதனை நடத்தப்பட்டு இலவச கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன.

இவ் அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது அனைத்து நோயாளர்களும் நேரகாலத்துடன் சமுகம்கொடுத்து பலனடைய அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

(607)

தகவல்
ஆயர் இல்லம்

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்

தோற்றம் 23 - 05 - 1916



மறைவு 28 - 12 - 2003

## அமரர் சின்னத்தம்பி பண்டாரி

(வராகி அம்மன் கோயிலடி, கொக்குவில் மேற்கு கொக்குவில்)

பாசத்தின் இருப்பிடமே ~ எம்
பண்பின் பிறப்பிடமே ~ எம்
அன்பின் நிறைவிடமே ~ நாம்
கலங்கி அழுகிறோம் ~உனை
கண்ணீரில் தேடுகிறோம்.

28.12.2003 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு வில்லூன்றி தீர்த்தக்கேணியில் நடைபெற்றது. வீட்டுக்கிரியைகள் 27.01.2004 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். மேற்படி கிரியைகளில் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

276, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2172)

ப.ஜீவரட்ணம்
கட்டட ஒப்பந்தக்காரர்,
கலட்டி.

# சிறு விளம்பரம்

## தேவை

தச்சு, உலோக ஒட்டு வேலைக்கு உடனடியாக ஆட்கள் தேவை. திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். நேரில் வரவும்.
நரீன் தளபாட நிலையம், கே.கே. எஸ் றோட், யாழ்ப்பாணம். (சி-2173)

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ஷாம், குட்டி ராதிகா நடித்த
இயற்கை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
HULK
பெரியோர், சிறியோர் ஒன்றாகப் பார்க்கக்கூடியது
(சி-2004)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா
நடித்த
ஜெய்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2005)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 02 - 11 - 1917



இறப்பு 09 - 01 - 2003

## அமரர் இராசா நாகம்மா

திதி - 27.01.2004

ஓராண்டு ஆனதோ - அம்மா
நீங்கள் எமைப் பிரிந்து
பல்லாண்டு சென்றாலும் - அம்மா
ஆறாது உங்கள் துயர்

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்

(606)

தகவல் :-
இரத்தினசிங்கம் லங்காதேவி
17/34 நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சி யாப்பு கைச்சாத்திடுவதில் தாமதம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புதிய கூட்டமைப் பான மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் கட்சி யாப்பு கைச் சாத்திடப்படுவதில் தாமதங்கள் தோன்றியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய முன்னணியின் பதவிக ளைப் பகிர்வதில் சிறிலங்கா சுதந் திரக் கட்சிக்குள் ஏற்பட்ட முரண் பாடே, யாப்புக் கைச்சாத்திடப்படு வதில் ஏற்பட்ட தாமதத்துக்குக் கார ணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 20 ஆம் திகதி புதிய கூட்டமைப்பின் புரிந்துணர்வு உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டதும், அன்றிரவே யாப்பும் கைச்சாத்திடப் படத் திட்டமிடப்பட்டிருந்த போதி லும், பின்னர் அது பிற்போடப்பட் டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டமொன்று ஜனா திபதி மாளிகையில் இடம்பெற்றதும், ஜே.வி.பி.யினர் அங்கு சென்று கட்சி யாப்பில் கையொப்பமிடுவது எனத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இறுதி நேரத்தில் ஏற்பட்ட முரண் பாடுகள் இத்திட்டத்தில் காலதாம தத்தை ஏற்படுத்திவிட்டது.

ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் பதவியை யாருக்கு வழங்குவது என்ற விடயத்தில் சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்குள் முரண் பாடுகள் தோன்றியிருப்பதாக அந் தக் கட்சி வட்டாரங்கள் கூறியுள்ளன. இந்த முன்னணியின் செயலாளர் பதவிக்கு மங்கள சமரவீர, அனுரா பண்டாரநாயக்க, மைத்திரிபால சிறி சேன ஆகியோருடைய பெயர்கள் பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும், எவரை செயலாளராக நியமிப்பது என இன்னமும் முடிவுசெய்யப்பட வில்லை என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பொதுஜன ஐக் கிய முன்னணியில் அங்கம் வகிக் கும் கம்யூனிஸ்ட் கட்சி புதிய கூட்ட மைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்திருப் பதனால், பொதுஜன ஐக்கிய முன் னணிக்குள் இக்கூட்டமைப்பு முயற் சிக்கு கடுமையான எதிர்ப்புத் தோன்றி யிருப்பதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது.

# இடைக்கால தேர்தல் திருத்தத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது

## நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர் பாக நாடாளுமன்றத் தெரிவுக்குழு வின் இடைக்கால அறிக்கையை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தற்போதைய முன்னெடுக்கப் பட்ட சீர்திருத்தங்கள் -தமிழ்மக்க ளின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றமாட்டாது. பொதுமக்க ளின் அபிலாஷைகளை நிறை வேற்றுவதற்கான அதிகாரப் பரவ லாக்கல் அடங்கிய புதிய யாப்பே நாட்டுக்கு அவசியம்.

நாட்டில் தற்போதைய அரசியல் யாப்பு சேர்த்துக்கொள்ளக்கூடிய தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து, கூட்டமைப்பின் நிலைப்பாட்டை தெரிவிக்கமுடியாதென்று கூட்ட மைப்பினர் தெரிவித்துள்ளனர்.

## நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்வைத்த

# இடைக்கால யோசனையில் கையொப்பமிட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மறுப்பு

(கொழும்பு)

தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்வைத்த, இடைக்கால யோசனையில் கையொப்பமிடுவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மறுப்புத் தெரிவித்துள்ள னர். இந்த யோசனைகள் குறித்து நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை ஆராயப்பட்டபோதே, இரா. சம்பந்தன் தலைமையில் கலந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தயோசனையில் கையொப்பமிட மறுப்புத் தெரி வித்தனர்.

தற்போதிருக்கும் அரசியலமைப்பின்கீழ் தேர்தல் முறையை மாற்றம் செய்வதால், எவ்விதபயனும் ஏற்படப்போவதில்லை என்று தெரிவித்தே, தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த யோசனையில் கையொப்பமிட மறுப்புத் தெரிவித்தனர்.

இலங்கையின் அரசியலமைப்பு - தமிழ் மக்களுடைய தேசியப் பிரச்சினைக்கு நீதியானதும், நியாயமானதுமான அரசியல் தீர்வை முன்வைக்காத நிலையில், தேர்தல் முறையை மட்டும் மாற்றம் செய்வதால், தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை என்று தமிழ்க் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, அப்பாத் துரை விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்ப லம், நடராஜா ரவிராஜ், கே.தங்கவடிவேல், ஜி.கிருஸண பிள்ளை, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஸ் குணவர்த்தன தலைமையிலான இந்தத் தேர்தல் மறுசீரமைப்பு நாடாளுமன்றக் குழு, புதிய தேர்தல் முறை தொடர்பான யோசனைகளை முன்வைத் திருக்கிறது. தற்போது நடைமுறையிலிருக்கும் விகிதாசாரத் தேர்தல் முறைமையுடன், தொகுதிவாரித் தேர்தல் முறையையும் கலந்து, ஒரு புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவது தொடர்பான யோசனைகளை இந்தக் குழு முன்மொழிந்திருக்கிறது.

# முஸ்லிம் காங்கிரஸ் திட்டவரைபு மாவட்டரீதியில் கலந்துரையாடல்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாரித்துள்ள இனப்பிரச்சினை தீர்வுக்கான திட்டவரைபு நகல் குறித்து, மாவட்டரீதியில் கலந்துரை யாடல்கள் நடத்தப்படவுள்ளன.

தென்கிழக்குப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருவ தாக, சங்கச்செயலாளரான எம்.ஏ. ஜப்பார் தெரிவித்தார்.

இதன்படி அம்பாறை, மட்டக் களப்பு, திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களில் இத்தகைய கலந்துரையாடல்கள் நடத்தப்பட வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் புத்திஜீவிகள், சமூ கத்தலைவர்கள், பிரமுகர்கள் முத லானோர், இக்கலந்துரையாடல்க ளுக்கு அழைக்கப்படவிருப்பதுடன், அவர்களது கருத்துக்களும் உள் வாங்கப்படவிருக்கின்றன.

(07)

# அடுத்த இரண்டு வருடத்திற்கு நிரந்தரத் தீர்வு சாத்தியமல்ல

நிரந்தர சமாதானத்தை நோக்கிய தீர்வென்பது, இன்னும் இரண்டு வருடங்களுக்கு சாத்தியப்படப் போவதில்லை என்று, சிறிலங்கா முஸ் லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித் தார்.

நிரந்தர சமாதானம் குறித்த விடயத்தில் ஜனாதிபதியினதும், பிரதமரதும் பார்வை 2005 ஆம் ஆண்டுக்கு அப்பால் உள்ளது. அதற்கு முந்திய அவர்களது பார்வை தெளிவற்றதாகக் காணப்படுவதால், 2005 ஆம் ஆண்டுக்குள் எதுவித சாத்தியப்படும் சம்பவங்களும் இடம்பெறும் என எதிர்பார்க்க முடியாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒலுவில் மகாபொல பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துமாறு வவுனியா நீதிவான் இளஞ்செழியன் உத்தரவு

(வவுனியா)

வவுனியாப் பகுதியில் இடம் பெற்றுவரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கு மாறு, வண்னிப் பிராந்தியப் பொலிஸ்மா அதிபர் மற்றும் வவு னியா சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் ஆகியோருக்கு வவு னியா மாவட்ட நீதிவான் எம். இளஞ்செழியன் எழுத்து மூலமான உத்தரவு வழங்கியுள்ளார்.

வவுனியா பகுதியில் இடம் பெறும் கொலைகள், கொள்ளை கள், உட்பட பல்வேறு குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவ தற்கு உரிய நடவடிக்கை எடுக்கப் படாதது குறித்து கவலை தெரிவித் துள்ள மாவட்ட நீதிவான் - வவுனியாவில் கடந்த 6 மாத காலப் பகுதியில் சுமார் 60 குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளதாக நீதி வானின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து, இந்த உத் தரவை பிறப்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை கைதுசெய்ய, இரவுநேர ரோந்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்து மாறும் நீதிவான் கேட்டுள்ளார்.

# பொதுத்தேர்தல் நடத்தவேண்டிய சூழ்நிலை தற்போதைக்கு இல்லை

## கம்யூனிஸ்ட் கட்சி கூறுகிறது

மீண்டும் ஒரு தேர்தலை நடத்து வதன்மூலம், நாட்டின் பொருளா தாரத்துக்கு மாத்திரமின்றி அரசி யல்ரீதியிலும் ஸ்திரமற்ற தன்மை தோன்றும் என கம்யூனிஸ்ட் கட்சி கூறுகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட கூட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பான தங்களது கருத்தினைத் துரித கதியில் வெளியிட இருப்பதாக, கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான செயலாளர் வி.யு.எஸ் குணசேகர கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு முன் பாக கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒப்பந் தம் தொடர்பாக சுதந்திரக்கட்சி அறிவித்ததாகவும் அவர் சுட்டிக் காட்டினார். எனினும் தங்களது கட்சியின் நிலைப்பாடு குறித்து தமது அரசியல் குழு ஆராய்வதாக வும், அதன் பின்னரே உரிய கருத்து ஒன்றினை வெளியிடமுடி யும் என்றும் குறிப்பிட்டார்.

வடக்கு-கிழக்கு பிரச்சனையா னது அரசியல் பிரச்சனையென சுட்டிக்காட்டும் செயலாளர் அதனை பேச்சுவார்த்தை மூலமே தீர்க்க வேண்டும் என்பதே கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு எனச் சுட்டிக் காட்டினார்.

இவ்வாறான அரசியற்தீர்வு ஒன்றுக்குச் செல்லும் வழியினை உறுதிசெய்ய வேண்டுமானால், மக் கள் விடுதலை முன்னணி போன்ற கட்சி தங்களது இனரீதியிலான கொள்கையை கைவிடவேண்டும் என்று கட்சியின் செயலாளர் வி.யு. எஸ் குணசேகரா மேலும் கூறினார்.

# சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி.கூட்டணி அரசியல் நிகழ்வு என்றே கலந்துகொள்ளவில்லை

## அதி மேற்றாணியார் தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையே கூட்டமைப் பொன்றை ஏற்படுத்தும் நிகழ்வு முற்றுமுழுதாக ஒரு அரசியல் நிகழ்வு என்று கருதியதாலேயே, தாம் அதில் கலந்துகொள்வதில்லை என்று தீர்மானித்ததாக கொழும்பு அதிமேற்றிராணியார் ஒஸ்வால்ட் கோம்ஸ் அடிகள் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையிலான கூட்ட மைப்பு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு - கடந்த செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் - பௌத்த, இந்து, இஸ்லாமிய மதகுருமாரின் பிரார்த்தனைகளும், ஆசிகளும் வழங்கப்பட்ட போதிலும், கிறிஸ்தவ, தோலிக்க மதகுருமார் எவரும் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாததால், கிறிஸ்தவ பிரார்த்தனைகள் நிகழ்வில் இடம்பெறவில்லை.

இதுகுறித்து கொழும்பு அதிமேற்றிராணியார் ஒஸ்வால்ட் அடிகளிடம் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

# வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

நயினாதீவிலுள்ள பாடசாலை மட்ட வலைப்பந்தாட்ட வீரர்களுக் கான பயிற்சி முகாமொன்று நடை பெறவுள்ளது. இந்த மாதம் 31 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி முகாமில் - யாழ்.மாவட்ட முன்னாள் விளையாட்டுத்துறைப் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.ஜே.ரூப சிங்கம் - மாணவர்களுக்கு வேண் டிய பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

நயினாதீவு மகா வித்தியால யத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சி முகாமில், அந்தப் பகுதிப் பாடசாலை அணிகளைச் சேர்ந்த வீரர்களைக் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பதிகாரி தெரிவிதுள்ளார்.

அவுஸ்ரேலியா மெல்பேனில் கேணல் கிட்டு நினைவுவிழா விளையாட்டுப் போட்டியில் சில காட்சிகள்





## தென்னாபிரிக்காவுக்கு எதிராக

# 54 ஓட்டங்களுடன் சுருண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி!



(கேப்டவுன்)

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 54 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து படுதோல்வி கண்டது.

நேற்றுமுன்தினம் முதலாவது ஒருநாள் போட்டி கேப்டவுனில் நடைபெற்றது. தென்னாபிரிக்க அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று, முதலில் துடுப்பெடுத்தாடியது.

மேற்கிந்திய தீவுகள் அணியினரின் பந்து வீச்சைத் தென்னாபிரிக்க வீரர்கள் சிறப்பாக அடித்து ஆடி, ஓட்டங்களைக் குவித்தனர். 50 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்களை மட்டுமே, இழந்து 263 ஓட்டங்களைத் தென்னாபிக்கா பெற்றது.

சிமித் 53 ஓட்டங்களையும், கிப்ஸ் 10 ஓட்டங்களையும், பீற்றர்சன் 10 ஓட்டங்களையும், டிப்பென்னர் ஒரு ஒட்டத்துடனும் ஆட்டமிழந்தனர்.

கலிஸ் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களை - ஐந்து சிக்ஸர்கள், ஆறு பவுண்டரிகளுடன் 94 பந்துகளில் பெற்றார்.

ருடொப் 76 பந்துகளில் 61 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தொடர்ந்து, பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர்கள் களத்தில் நின்றுபிடிக்கமுடியாமல், அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

கைல் - 04, சந்தர்போல் - 14, லாறா - 02, சர்வான் - 05, பவல் - 12, சிமித் - 01, ஹேர்லி - 02, ட்ரேக்ஸ் - 01, டிலான் - 01, கொலிமோர் - 06 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஜேக்கப்ஸ் - 6 ஓட்டங்களுடன் ஆட்டமிக்காமல் களத்தில் இருந்தார்.

தென்னாபிரிக்க வீரர்களின் அபாரமான பந்து வீச்சால் 23.2 ஓவர்களில் 54 ஓட்டங்களைளுக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி சுருண்டது. இந்தப் போட்டியில் 209 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது.

பந்து வீச்சில் என்றினி - 03, குளுஸ்னர் - 03, நெல் - 02, பொலொக் - 01 விக்கெட்டுக்கள் கைப்பற்றியிருந்தனர்.

ஒருநாள் போட்டியில் மேற்கிந்தியதீவுகள் அணி பெற்ற ஆகக்குறைந்த ஓட்டங்கள் இதுவாகும். 1992 ஆம் ஆண்டில் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டியில் 87 ஓட்டங்களையே மேற்கிந்தியத்தீவு அணி பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது

# சிம்பாப்வேயை 13 ஓட்டங்களால் தோற்கடித்தது அவுஸ்ரேலிய அணி!

சிம்பாப்வே - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நேற்று அடிலெய்டில் நடைபெற்ற ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்ரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. தனது 50 ஓவர்களில் அவுஸ்ரேலியா 7 விக்கெட்டுக்களை இழந்து 279 ஓட்டங்களைச் சேர்த்துக் கொண்டது.

இதில் மைக்கல் பெவன் 91 பந்துகளில் 6 பவுண்டரிகள் உட்பட 75ஓட்டங்கள் பெற்றார். அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் 11 பவுண்டரிகளை உள்ளடக்கி 63 ஓட்டங்கள் பெற்றார்.

சிம்பாப்வே அணித்தலைவர் 45 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி ஐம்பது ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 266 ஓட்டங்கள் மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

ஒரு புறத்தில் விக்கெட்டுக்கள் சரிய ஆரம்பித்ததும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் கிராண்ட் பிளவர் 94 ஓட்டங்களை சேகரித்தார்.

இவர் தவிர குறிப்பிடத்தக்க ஓட்ட எண்ணிக்கைகளை ஷோன் ஏர்வின் 33 ஓட்டங்கள், அணித்தலைவர் ஹீத்ஸ்ரீக் 28 ஓட்டங்கள், பிலிக் கொட் ஆட்டம் இழக்காமல் 31 ஓட்டங்களை பெற்றார்.

அவுஸ்ரேலியப் பந்து வீச்சாளர் பிரட் வில்லியம்ஸ், சைமன்ஸ் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்த, ஜிலெஸ்பி, பிரட்லீ, ஹொக், கிளார்க் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர்.

சிம்பாப்வே தான் கலந்துகொண்ட ஆறாவது ஆட்டத்திலும் தோல்வி கண்டிருக்கிறது.

ஏற்கனவே, இந்தியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுவிட்ட அவுஸ்ரேலியா தனது அணியில அடம் கில கிறிஸ்ட், இயன்ஹார்வி, அன்டிபிக்கெல் ஆகியோருக்கு ஓய்வு கொடுத்து



வேறு சிலரை ஆட அழைத்திருந்தது.

விக்கெட் காப்பாளராக கடமையாற்றியவர் பிரட்ஹடின், இவருடன் ஹொக், கிளார்க் போன்றோரும் களமிறங்கினர். இருந்தும் டெமியன் மார்ட்டினை ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறக்கியது வெற்றியளிக்கவில்லை.

அவரால் சேகரிக்க முடிந்தது 9 ஓட்டங்களை மட்டுமே. ஆனால், கடந்த ஐந்து ஆட்டங்களில் 64 ஓட்டங்களை மட்டும் பெற்ற பெவன் தன்திறமையை சரிவர நிரூபித்தார்.

## சிறந்த வீரராக ஸ்ரீவோ தெரிவு

அவுஸ்ரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கப்டனாக இருந்து இந்த மாதத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான தொடர் முடிவில் ஓய்வு பெற்றவர் ஸ்ரீவோ.

பல்வேறு சாதனைகள் படைத்த ஸ்ரீவோக்குக்கு அவுஸ்ரேலிய அரசாங்கம், இந்த ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதை வழங்கியது. விருது கிடைத்தது மிகப்பெரிய கௌரவம் என்று ஸ்ரீவோ மகிழ்ச்சி தெரிவித்தார்.

# காயமடைந்த சச்சின் மீண்டும் களம் வருகிறார்

(கன்பரா)

காயம் காரணமாக தொடர்ந்து 4 ஆட்டங்களில் விளையாடாத டெண்டுல்கர் பெர்த்தில் நடைபெறவுள்ள அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டியில் களம் இறங்கவுள்ளார்.

அவுஸ்ரேலியாவில் நடந்துவரும் மூன்று நாடுகள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. 3 ஆட்டங்கள் கொண்ட இறுதிப்போட்டி மெல்போர்னில் அடுத்த மாதம் 6 ஆம் திகதி தொடங்கவுள்ளது. இதில இந்திய - அவுஸரேலிய அணிகள் மோதவுள்ளன.

கடந்த 4 ஆட்டங்களில் காயம் காரணமாக ஆடாத டெண்டுல்கர் "நல்ல உடல் தகுதி பெற்றுவருவதாகவும், பெர்த்தில் அடுத்த மாதம் 1ஆம் திகதி நடைபெறும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான லீக் ஆட்டத்தில் களம் இறங்குவேன்" என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

28 ஆம் திகதி நடைபெறும் பிரதமர் லெவன் அணிக்கு எதிரான



காட்சிப் போட்டியில் ஆடவில்லை என்று டெண்டுல்கர் கூறியுள்ளார்.

வீரேந்தர் ஷேவாக், யுவராஜ் சிங் ஆகியோரும் பெர்த் போட்டிக்கு முன்பு உடல் தகுதி பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

3 நாடுகள் போட்டியில் இந்திய அணி இன்னும் இரண்டு லீக் ஆட்டங்களில் விளையாட வேண்டி உள்ளது. அடுத்த மாதம் 1 ஆம் திகதி அவுஸ்ரேலியாவுடனும், 3 ஆம் திகதி கடைசி லீக் ஆட்டத்தில் சிம்பாப்வேயுடனும் இந்தியா மோதுகின்றது.

# ஆசிய ஜூனியர் கிரிக்கெட் போட்டியில் இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதல்

(பெங்களூர்)

ஆசிய கோப்பை ஜூனியர் கிரிக்கெட் இறுதிப் போட்டியில், இன்று இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

17 வயதுக்கு உட்பட்ட வீரர்களுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி பெங்களூரில் நடைபெற்றுவருகிறது.

இதன் அரை இறுதி ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

அரை இறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய - இலங்கை அணிகள் மோதின. முதலில் விளையாடிய இலங்கை அணி 41.1 ஓவர்களில் 193 ஓட்டங்களுள் சுருண்டது. டார்தினா 74 ஓட்டங்களும், மாத்யூஸ் 56 ஓட்டங்களும் எடுத்தனர்.

இந்திய அணி தரப்பில் உமேஷ் கர்வி 4 விக்கெட்டும், சபாஜ்நதீம் 3 விக்கெட்டும், பியுஷ் சாவ்லா 2 விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.

பின்னர், ஆடிய இந்திய அணி 37.4 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 194 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. ரவிகாந்த் சுக்லா ஆட்டம் இழக்காமல் 96 ஓட்டங்களும், பிரதீப் ஆட்டம் இழக்காமல் 35 ஓட்டங்களும் எடுத்தனர்.

மற்றொரு அரை இறுதியில் பாகிஸ்தான் அணி பங்களாதேஷ் அணியை எதிர்கொண்டது. முதலில் விளையாடிய பங்களாதேஷ் 44 ஓவர்களில் 152 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பின்னர் ஆடிய பாகிஸ்தான் அணி 31.5 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 154 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில்வெனறது.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் இந்திய - பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

## மகளிர் தின விளையாட்டுப் போட்டி

மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ விளையாட்டுத் துறையினரால் நடாத்தப்படவுள்ள மகளிருக்கான விளையாட்டுப் போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

நாளை குழுநிகழ்ச்சிகளும், நாளை மறுதினம் தடகளப்போட்டிகளும் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. போட்டிகள் அனைத்தும் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்திலே நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்கு பற்றும் அணிகள் மற்றும் வீரர்கள் யாவரையும் குறித்த நேரத்துக்கு சமூகமளிக்கும்படி தமிழீழ விளையாட்டுத் துறையினர் கேட்டுள்ளனர்.

# காங்கிரஸ் போட்டியிடும் தொகுதிகள் மாநிலத் தலைவர்கள் முடிவு செய்வர்

## கமல்நாத் சென்னையில் பேட்டி

புதுச்சேரி தொகுதி பற்றி பா.ம.க.வுடன் பேசுவோம் என்று காங்கிரஸ் மேலிடத் தலைவர் கமல்நாத் கூறினார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ், தி.மு.கவுடன் கூட்டணி அமைத்து போட்டியிடுகிறது. தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த காங்கிரஸ் கட்சியின் மேலிடத் தலைவர்கள் மன்மோகன்சிங், கமல்நாத் ஆகியோர் விமானம் மூலம் நேற்றுமுன்தினம் முற்பகல் சென்னை வந்தனர்.

அவர்கள் அண்ணா அறிவாலயத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசனுடன் சேர்ந்து தி.மு.க.தலைவர் கருணாநிதியுடன் தொகுதி பங்கீடுகுறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.



மன்மோகன்சிங், கமல்நாத், கருணாநிதி

சுமார் ஒன்றரை மணிநேரம் பேச்சுவார்த்தை நடந்தது. இதன்பிறகு கமல்நாத் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது,

பேச்சுவார்த்தை மிகவும் நன்றாகவும், பயனுள்ளதாகவும் இருந்தது. பேச்சுவார்த்தை முன்னேற்றம் ஏற்படும் வகையிலும் இருந்தது. கூட்டணியைப் பலப்படுத்தும் வகையிலும், தோற்கடிக்க முடியாத வெற்றி கூட்டணியாக அமையும் வகையிலும் இந்தப் பேச்சுவார்த்தையில் இன்னொரு மைல்கல்லை கடந்துள்ளோம்.

இன்னும் இரண்டு, மூன்று நாட்களில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் தி.மு.க. தேர்தல் குழுவுடன் கலந்து பேசி எந்தெந்த தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிட உள்ளது என்பதை தீர்மானிப்பார்கள் எனத் தெரிவித்தார்.

# விளையாட்டு

# இந்திய கிரிக்கெட் அணிக்கு தேர்வுக் குழு தலைவர் பாராட்டு

(கொல்கொத்தா)

இந்திய அணி அவுஸ்ரேலிய சுற்றுப்பயணத்தில் சிறப்பாக விளையாடி வருகிறது. இதுபோல் முன்பு வெளிநாட்டு மண்ணில் சிறப்பாக விளையாடவில்லை. இதற்கு முக்கிய காரணமாக கப்டன் கங்கூலியையும் வீரர்களையும் பாராட்டுகின்றேன். இவ்வாறு இந்திய கிரிக்கெட் தேர்வுக்குழுத் தலைவர் சையட் கிர்மானி தெரிவித்தார்.

பாகிஸ்தான் பயணத்துக்கான இந்திய அணித்தேர்வு அவுஸ்ரேலிய பயணம் முடிந்து திரும்பியதும் நடைபெறும் பந்துவீச்சில் பலவீனம் இருப்பது உண்மைதான். அது சரி செய்யப்படும். காயம் அடைந்த பந்து வீச்சாளர்கள் ஷகீர்கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் பாகிஸ்தான் பயணத்தக்கு முன்பு உடல் தகுதிபெற்று விடுவார்கள் என்று நம்புகின்றோம். பாகிஸ்தான் அணிக்கு எதிராக நமது அணி சிறப்பாக விளையாடும். இவ்வாறு கிர்மானி கூறினார்.

# வேலணை பிரதேசமட்ட மென்பந்து சுற்றுப்போட்டி

வேலணைப்பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு நடாத்தப்படும் மென்பந்துச் சுற்றுப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. நயினாதீவு மத்தி விளையாட்டு மைதானத்தில் காலை 9.00 மணியிலிருந்து இந்தப் போட்டி நடைபெறுமென வேலணைப்பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

ஆறு பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட ஏழுபேர் பங்குபெறும் இந்தச் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பித்த கழகங்கள், அணிகள் அனைத்தையும் குறித்த நேரத்துக்கு வருகை தந்து ஒத்துழைப்புத் தருமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

மோதும் அணிகளின் தெரிவுகள் முன்னரே இடம்பெற்று, அது தொடாபான உரிய கடிதங்களும், அறிவுறுத்தல்களும் சம்பந்தப்பட்ட கழகங்களுக்கு தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மனித உரிமைகள், சமுதாயத்துவம் பேணும் தமிழீழ நீதிமன்றின் செயற்பாடுகள்

## நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா

(யாழ்ப்பாணம்)

மாறிவரும் உலக ஒழுங்கிற்கு ஏற்பவும், எமது பண்பாட்டுக்கு ஏற்பவும், எம்மை நாமே ஆளும் எமக்கே உரித்தான மனித உரிமைகளையும், சமத்துவத்தைப் பேணும் வகையில் தமிழீழ நீதிமன்று செயலாற்றி வருகின்றது எனத் தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா தெரிவித்தார்.

தமிழீழ சட்டக் கல்லூரியிலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய, 4 ஆவது தொகுதி மாணவர்களின் விழாவுக்குத் தலைமை தாங்கி உரையாற்றும்போதே - பரா இவ்வாறு தெரிவித்தார்.

தனிப்பட்ட உணர்வினையும், பந்தபாச உணர்வுகளையும் மறந்து, சத்தியத்தின் அடிப்படையில் தமிழீழ நீதிநிர்வாகம் பத்து ஆண்டுகால சேவை செய்துள்ளது. 1993 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ நீதி நிர்வாகம் - இதுவரை 4 அணிகளாக நீதியாளர்களையும், சட்டவாளர்களையும் வெளியேற்றியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

வெகுவிரைவில் உள்வாரி யாகவும், வெளிவாரியாகவும் மேலும் ஒரு அணி வெளியேறவுள்ளது எனவும் தெரிவித்த அவர் -

எமது தாயகப் பிரதேசங்களில் முறையீட்டு வரம்புகளை மீறி, நாம் மேற்கொண்டுவரும் நீதிநிர்வாக சேவை, எமக்கு பெருவெற்றி அளித்துள்ளது. மாவட்ட முறை மன்றங்களில் வழங்கப்படும் தீர்ப்பினை மக்கள் ஏற்றுக்கொள்ளும் காரணத்தால், மேன்முறையீட்டு மன்றங்களுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் குறைவதாவும் அவர் தெரிவித்தார்.

### நகுலேஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவம் - அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகி, பதினைந்து நாடகளுக்குத் தொடர்நது நடைபெறவுள்ளது.

கடநத இரு வருடங்களாக இந்த ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருப்பதால், விசேட அபிஷேக ஆராதனைகளே இந்தமுறை மஹோற்சவ காலத்தில் நடைபெறவுள்ளன.

இதன்போது - கூட்டுப்பிரார்த்தனை, நற்சிந்தனைகள், கதாப்பிரசங்கம், வில்லிசை முதலான நிகழ்ச்சிகளும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மஹோற்சவ காலங்களின்போது, நிகழ்ச்சிகளை வழங்க விரும்பும் பாடசாலைகள் தன்னோடு தொடர்பு கொளளும்படி ஆலயப் பிரதம குரு நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (72)




பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட - மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வேலாயுதம்பிள்ளை உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம். (91)



பட்டிப்பொங்கல் தினத்தன்று யாழ். சத்திரச்சந்தி வைரவர் ஆலயத்தில் நடத்தப்பட்ட பெங்கல் விழாவின் போது, பசுப்பாதுகாப்பு இணை அமைப்பா ளர் கு. கங்கைவேணியன் விளம்பர ஸ்டிக்கர்கள் வெளியிட்டு வைப்பதைப் படத்தில் காணலாம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### புதிய முன்பள்ளி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலையத்தில் புதிய முன் பள்ளியொன்று ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

இந்தமாத முற்பகுதியில் ஆரம பித்துவைக்கப்பட்ட இந்த முனபள்ளியில், தற்போது இருபதுக்கு மேற்பட்ட சிறுவர்கள் கல்வி கற்று வருகின்றனர். (24)

### இலவச கணினி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கிழக்கு இளைஞர் கழகம் - தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்புடன் இணைந்து நடாத்தும் இலவச கணினிப் பயிற்சி நெறியின் புதிய பிரிவுகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

மாலை நான்கு மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் புதிய பிரிவுகளில், ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து, பயன்பெறுமாறு இளைஞர் கழகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ச)

### காவலாளியை மோதிய லொறி தலைமறைவு

(சாவகச்சேரி)

நகரசபைக் காவலாளியை மோதிய லொறி, தப்பிச்சென்ற சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றது. சாவகச்சேரி நகரசபை அலுவலகக் காவலாளியான கைதடி வடக்கைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை வரதராஜா (வயது 52) என்பவரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவராவார்.

கொழும்பிலிருந்து பொருட்களை ஏற்றிவந்த லொறி ஒன்றே, இவ்வாறு இவரை மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. இரவுநேரக் கடமைக்காக அவர் செனறுகொண்டிருக்கையிலேயே, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

### விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு விவசாய சம்மேளன அங்கத்தவர்களுக்கு பயிறசி வகுப்பொன்று நடாத்தப்பட்டது. கடந்த 24 ஆம் திகதி மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த பயிற்சி வகுப்பில் - தூவல் நீர்ப்பாசனமுறை, நெல் அறுவடை, பயிர்ச் செய்கை நுட்பங்கள் என்பன தொடர பாக விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், கடந்த வருடம் விதை நெல்லை சம்மேளனமூடாக பெற்றுக்கொண்ட விவசாயிகளுக்கு மண் வெட்டியொன்று இலவசமாக வழங்கப்பட்டதுடன், புதிய விவசாயிகளின் பெயர் விபரங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. (24)

### சட்டவிரோதமாக மணல் ஏற்றியவருக்கு அபராதம்

சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த ஐவருக்குத் தலா ஐந்நூறு ரூபா வீதம் இரண்டாயிரத்து ஐநூறு ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது. கச்சாய் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மணல் ஏற்றிய ஐந்து பேரை, அவர்களது உழவு இயந்திரத்துடன் சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் ஆஜர படுத்தியிருந்தனர். இதன்போதே சாவகச்சேரி பதில் நீதிவான் எஸ். கந்தசாமி அபராதம் விதித்ததுடன், இவர்களால் கொண்டுவரப்பட்ட மணலும் பறிமுதல் செய்யப்பட்டது.(29)

### வெங்காயப் பயிர்களில் நோய்த்தாக்கம்

அதிக வெயில், பனி காரணமாக வெங்காயப் பயிர்களில் நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளமையால், அசசுவேலிப்பகுதி விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் நட்டத்துக்கு உள்ளாகாமல் தடுப்பதற்காக, ஏற்ற மருந்துகளைப் பாவித்த போதும், நோய்த்தாக்கத்திலிருந்து விடுபடமுடியாமல் உள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (76)

### இலவச பாடநூல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான இலவச பாடநூல்கள் - இன்றும், நாளையும் விநியோகிக்கப்படவுள்ளன. மாலை இரண்டு மணிக்குப் பினனர் வலயக் கல்விப்பணிமனையில் பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைகளுக்கான இலவசப் பாட நூல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். இந்தத் தினங்களில் தமது பாடசாலைக்குரிய பாடநூல்களைத் தவறாது பெற்றுக்கொள்ளும்படி பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கேட்டுக கொண்டுள்ளார். (29)

### வீதி மோசமாகச் சேதம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது வேம்பிராய் - புத்தூர் சந்தி வீதி சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2000 ஆம் ஆண்டு தென்மராட்சியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது, இராணுவத்தினர் தமது கவசவாகனங்களின் - போக்குவரத்து வழியாக இந்தப் பாதையையே உபயோகித்திருந்தனர்.

இதனாலேயே, இந்த வீதி மிகவும் சேதமடைந்துள்ளது. வீதியை திருத்துவது தொடர்பாக அதிகாரிகளுக்குப் பல தடவைகள் முறையிட்டபோதும், எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவித்தனர். (29)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : வ.நிரூஜா
முகவரி : மீசாலை மேற்கு, மீசாலை.

### ஐந்தாவது அகவையில்



பெயர் : பா.காயத்திரி
முகவரி : பத்தமேனி, அச்சுவேலி.

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------

முகவரி :------------------

பிறந்த ஆண்டு :------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றோர் ஒப்பம்

## விண்ணப்பம் அனுப்பி 19 மாதமாகியும் தேசிய அடையாள அட்டை கிடைக்கவில்லை

### பெற்றுத்தர கோரி ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

2002 ஆம் ஆண்டு விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரை தேசிய அடையாள அட்டை கிடைக்கவில்லை எனத் தெரிவித்து - யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கற்குளம் வீதி, கொட்டடியைச் சேர்ந்த வைரமுத்து ரவிச்சந்திரன் என்பவரே இந்த முறைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

இவரது முறைப்பாட்டில் தெரிவிக கப்பட்டிருப்பதாவது -

கடந்த 2002 ஆம் ஆண்டு மே.மாதம் 20 ஆம் திகதி ஜே.66 கிராம அலுவலரூடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையில் தேசிய அடையாள அட்டை கிடைக்கப்பெறவில்லை.

தேசிய அடையாள அட்டைக்கு வண்ணப்பித்தமைக்கான பற்றுச்சீட்டை வைத்திருக்கும் இவர், தமது கிராம சேவகரிடம் பலமுறை சென்று விசாரித்த போதிலும், அடையாள அட்டை கிடைக்கப்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டபோது, அவர்கள் இவவாறு அடையாள அட்டையைப் பெறுவதாயின் கொழும்புக்குச் செல்லவேண்டுமெனத் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு சென்று வருவதாயின் பணச்செலவு மற்றும் சிங்கள மொழித் தொடர்பாடல் தொடர்பான சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால், அங்கு சென்று வரமுடியாத நிலையில் உளளமையால், தனது ஆள் அடையாள அட்டையினைப் பெற்றுத்தருமாறு மனித உரிமைகள் ஆணைக் குழுவினரிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார். (ப)

## சமுர்த்தி உத்தியோகத்தர் மன்றம் சண்டிலிப்பாயில் அங்குரார்ப்பணம்

சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்களின் நன்மைகருதி, அண்மையில் 2004 ஆம் ஆண்டுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த மன்றத்தின் தலைவராக - எஸ்.கே.ஆனந்தவேலும், உபதலைவராக எஸ்.தர்சிகாவும், செயலாளராக எம்.வதனியும், உபசெயலாளராக பி.சதீஷும், பொருளாளராக கே.பாஸ்கரனும் தெரிவுசெய்யப்பட்டதுடன், ஏனைய ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

சண்டிலிப்பாய் பிரதேசசெயலக உதவி பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு - சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நிர்வாக அலுவலர் ஆகியோரும் கலந்து கொண்டனர். (44)

## புளியங்கூடல் உபதபாற்கந்தோரில் தபாலதிபர் இல்லை; பணிகள் தேக்கம்!

புளியங்கூடல் உபதபாற்கந்தோரில் உப தபாலதிபர் இன்மையால், அங்கு பணிகளை நிறைவேற்றவரும் மக்கள் பெரும் கஷடங்களை அனுபவித்து வருவதாக, அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

இந்த உப தபாற்கந்தோரில் தபால் அதிபராக கடமையாற்றியவர் பிரசவ லீவில் சென்றுள்ளதால், அங்கு தபால் அதிபர் செய்யக்கூடிய கருமங்களை ம க்கள் நிறைவேற்ற முடியாதுள்ளது. அங்கு தற்காலிகமாக கிராமங்களுக்குத் தபால் விநியோகிக்கும் நபரை நிர்வாகத்தினர் தற்காலிகத் தபால் அதிபராக நியமித்துள்ளனர் எனவும், அவர் தபாலகளை விநியோகிக்கச் செல்லும் நேரங்களில் அங்கு பதிவுத்தபால் நடவடிக்கைகள், மாதாந்த உதவுதொகை வழங்கல் என்பன முற்றாக தடைப்படுவதாகவும், இதனால் தாம் பல கஸ்டங்களை அனுபவிப்பதாகவும் அந்தப் பகுதி மக்கள் பலரும் கவலை தெரிவித்துள்ளனர். (44)

## பக்கச் சிதறல்
பல்சுவை அரங்கு

# கலப்பின நாய்கள்

பிரித்தானியாவில் நாய் பண்ணைகள் நடத்துபவர்களிடையே நாய்களுக்கு ஏற்படும் நோய்கள், மரணத்திற்கான காரணம், பிறப்பில் ஏற்படும் பாதிப்பு, பாதிப்புகள் தொடர்பாக விஞ்ஞானிகள் ஆய்வை மேற்கொண்டிருந்தனர். இந்த ஆய்வை 180 பண்ணைகளில் நடத்தியிருந்தனர். இதன்மூலம் சில நாய் இனங்களுக்கு ஏற்படும் நோய்களை இனம்கண்டு கொளள முடிந்தது. குறிப்பாக 'டல்மேசியன்' எனப்படும் ஒருவகை இனத்தில் செவிட்டுத் தன்மை ஏற்படுவதையும் அறிந்து கொண்டனர். இந்த ஆய்வில் புதிய நல்ல இனங்களை கொண்ட நோய் எதிர்பபு சக்திமிக்க இனங்களை உருவாக்க முடிந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.



இதனால், நாய் வளர்ப்பவர்களுக்கு நல்லினங்களைத் தேர்ந்தெடுத்து, கலப்பினங்களை உருவாக்கமுடிந்தது. மேலும், இதயநோய்கள், இரதத்பெருக்கு, எலும்புகளில் பாதிப்பு ஆகியவற்றைச் சில இனங்களில் காணக்கூடியதாக இருந்தது.

# தேவை - நித்திரை

போதிய நித்திரை செய்பவர்கள் பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு கண்டு விடுவார்கள் என விஞ்ஞானிகள் நிருபித்துள்ளனர். இவ்வுண்மையைப் பரிசோதிப்பதற்கு ஜேர்மனியிலுள்ள சர்வகலாசாலை ஒன்று ஆய்வை மேற்கொண்டிருந்தது. இந்த் ஆய்விற்கென 106 தொண்டர்களை தேர்ந்தெடுத்திருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விடுகதையை கூறியிருந்தனர். தமது கேள்விக்கான விடை அந்த விடுகதைக்குள் அமைந்துள்ளதாகவும் தெரிவித்தனர்.



நித்திரையிலிருந்து இடைநிறுத்தி கேள்வி கேட்கப்பட்டவர்களினால் சரியானமுறையில் பதில் தெரிவிக்க முடியாதிருந்தது. இதன்மூலம் பகலில் நடைபெற்ற சம்பவங்களை மூளை நித்திரையில் மீளவும் ஞாபகத்திற்கு கொண்டுவருகின்றதென அறிவித்துள்ளனர். மேலும் வழமையாக நித்திரை கொள்ளும் நேரத்தில் சிறிதளவைக் குறைத்தவர்களாலும் சரியானமுறையில் சம்பவங்களை மீளவும் தெரிவிக்கமுடியாத நிலையினை அவதானித்தனர்.

இதேநேரத்தில் போதியளவு நித்திரை செய்தவர்கள் - விடுகதையில் புதைந்திருந்த புதிரினை இலகுவில் தெரிவித்தனர். இதில் சிறுவர்கள் பாடசாலையில் சிறந்தமுறையில் கல்வியை மேற்கொள்வதற்கும், வயது வந்தவர்கள் தமது வேலையைச்சிறந்த முறையில் செய்வதற்கும் முழுமையான நித்திரை தேவை என்பதையும் ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

பிரித்தானியாவில் பல மில்லியன் மக்கள் போதிய நித்திரையில்லாமல் கஷ்டமடைவதாகவும், அவை 10 ஆண்டுகளில் அதிகரித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## திரை விமர்சனம்

# விருமாண்டி

சிறையில் இருக்கும் விருமாண்டி, கொத்தாளத்தேவர் ஆகிய தூக்குத்தண்டனைக் கைதிகளைப் பேட்டியெடுக்க வருகிறார் ரீ.வி நிருபர் ஏஞ்சலா காத்தமுத்து. விருமாண்டி செய்த 24 கொலைகள் பற்றி விபரிககிறார் கொத்தாளத்தேவர். கமலினுடைய திரைக்கதை, வசனம், நடிப்பு, இயக்கம் அவருக்கு நிகர் அவர்தான். விருமாண்டி என்ற முரட்டுப் புலியின் மறுபக்கத்தில், அழகான காதலுக்கு உயிர் கொடுத்திருக்கும் அன்னலட்சுமி - கண்ணில் கருப்புக்கண்ணாடி அந்தக் கிராமத்தில் கொஞ்சம் படிச்ச அன்னலட்சுமியாக அபிராமி. கொத்தாளத்தேவராகப் பசுபதி, கமலுக்கு ஈடு இணையாக நடிப்பில் வெளுத்து வாங்கியிருக்கிறார். இன்ஸ்பெக்ரர் பேய்க்காமன் புதுமுகமாம்.



இத்தனைநாள் எங்கப்பா இருந்தாய். ஒரு ராக ராஜாங்கம் நடத்தியிருக்கிறார் இளையராஜா.

தேனியையும் மதுரையையும் சென்னைக்குக் கொண்டு வந்தருக்கிறார் ஆர்ட் டைரக்டர் எம்.பிரபாகர். வழக்கமான கமல் படங்களில் வருகின்ற அம்புலிமாமா விளையாட்டுக்கள் படத்தில் பெருமளவிற்கு குறைக்கப்பட்டிருப்பது படத்துக்கு போடப்பட்ட தூபம்.

வழக்கம்போல் கமல் தன்னுடைய பங்கினை சிறப்பாகச் செய்திருந்தாலும், கொடூரமாக இருக்கின்ற கொலைகளில் மனசைத் துளைக்கின்றது ரத்தவாடை.

விருமாண்டி ரத்தத்தின் ரத்தம்.

- P.N.S. -

# புரதம் தேவை

டொக்டர் சுக்கின் என்பவர் உடல் பருமனைக் குறைத்துக்கொள்வதற்கு உணவுப்பழக்கத்தில் சில மாற்றங்களைத் தனது பரிசோதனைகள்மூலம் தெரிவித்தார். உருளைக்கிழங்கு, பாண், பஸ்டா எனப்படும் ஒருவகை மாப்பொருள் ஆகியவற்றைக் குறைத்து - இறைச்சி, முட்டை, வெண்ணைக்கட்டி ஆகியவற்றைக் கூடுதலாக உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலம், உடல்பருமனைக் குறைத்துக் கொள்ளமுடியும் எனத் தெரிவித்தார்.



இந்த வகையான உணவுகள்மீது ஆய்வுகள் நடத்தப்பட்டபோது, குறைவான கலோரிகளே இந்த வகையான உணவு உண்பவர்களுக்குக் கிடைப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஆனால், உருளைக்கிழங்கு சாப்பிடுபவர்கள் உடல் பருமனைக் குறைக்க முடியாது எனக்கூறப்படுகிறது. இதற்குரிய காரணம் மாப்பொருட்களில் அதிகளவு சீனி, வெல்லம் காணப்படுவது உருளைக்கிழங்கிலேயே ஆகும்.

இதன்மூலம் புரதப்பொருட்களைப் பாவிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

# மரதன் பறவை

அல்பேற்றொஷ் (ALBATROSS) எனப்படும் கடல் பறவை - நீண்ட தூரத்திற்கு இடப்பெயர்வை மேற்கொள்ளும் ஆற்றல் கொண்டவை. இந்த இனம் கடலில் விரிக்கப்படும் நீண்டதூர வலைகளினால் ஒவ்வொரு ஆண்டும் அதிகளவில் மரணமடைகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 300,000 இற்கும் மேற்பட்ட பறவைகள் மரணமடைவதாக அறிவிக்கப்பட்டுள்ளன.



இந்தப் பறவையினத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு பறவைகள்மீது நாட்டம் கொண்டவர்களும், பறவைகள்மீது பணதைக் கட்டிப்போட்டி நடத்துபவர்களும் ஒன்றிணைந்து, இவற்றைக் காப்பாற்றுவதற்கு நிதி சேகரிக்கத் திட்டமிட்டுள்ளனர். பறவைச்சவாரி (BIRD RACE) என அழைக்கப்படும் இந்தப் போட்டியில், கடல் பறவைகளை 6000 கடல் மைல் தூரத்திற்குப் பறக்கவிடுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

இப்போட்டி ரஷ்மேனியா என்ற இடத்தில் ஆரம்பித்து, தென்னாபிரிக்கா வரை பறக்க வைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பறவைகளின் உடலில் இலத்திரோன் பட்டிகளை (ELECTRON TAGGING) பொருத்தி, இவற்றின் இடம்பெயரும் பாதையை ரேடியா அலைத்தொடர்புகள்மூலம் அறிந்துகொள்ள ரஷ்மேனிய விஞ்ஞானிகள் தீர்மானித்துள்ளனர்.

மார்ச் மாதம் ஆரம்பித்து 5 மாதங்கள்வரை இந்தப் பயணம் நீடிக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தப் போட்டியினை ஆரம்பித்தவர்கள் - செய்றகைக் கோள்மூலம் பறவைகள் செல்லும் பாதையை அறிந்துகொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

அல்பேற்றொஷ் பறவை புராணங்களில் சொல்லப்படும் மிகவும் அழகான பறவையினம் என, இவற்றைக் காப்பாற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பேராசிரியர் 'டேவிட் பலமி' தெவித்துள்ளார்.

# பலூன் பயணம்

சென்ற செப்ரெம்பர் மாதம் இங்கிலாந்தின் கோண்வால் என்ற பிரதேசத்திலிருந்து சுன்டினல்சன், கொலின் பிரைஷ் கொட் ஆகிய இருவரும் பலூனின்மூலம் பூமியின் மிக உயர்ந்த தூரத்திற்குச் செல்வதற்கென ஆரம்பித்த பிரயாணம், பலூனில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்தது. கீலியம் (HELIUM) எனப்படும் காற்றிலும் அடர்த்தி குறைந்த வாயுவையே பலூனை நிரப்புவதற்குப் பாவித்தனர்.



தமது பிரயாணத்தை 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர். இதனால் பலூனில் சில மாற்றங்கள் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

மேலும் பலூனை உருவாக்குவதற்குப் பாவிக்கும் மூலப்பொருட்களில் மாற்றங்களை உருவாக்குவதன்மூலம் தூரத்தையும் வலிமையையும் அதிகரிக்க உள்ளனர்.

மேலும் பலூன் உதவியுடன் பிரயாணம் மேற்கொள்ளும்போது, சூடாக காற்றின் உதவியுடன் மேலே செல்வது வழக்கம். ஆனால், தீப்பற்றக்கூடிய வாயுவான கீலியத்தைப் பாவிக்க உள்ளதால், நன்கு திட்டமிட்டுச் செயல்பட வேண்டியுள்ளது.

மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# டிஜிட்டல் கமரா

கொடாக் (KODAK) நிறுவனம் டிஜிட்டல் (Digital) கமராக்களைக்கூடியளவில் உற்பத்தி செய்துவருகின்றது. உல்லாசப் பிரயாணம் செல்பவர்கள் மத்தியில் டிஜிட்டல் கமராக்கள் பிரபலம் பெற்று வருகின்றன. முன்னைய கமராக்களில் தெளிவான படமொன்றை எடுத்துக்கொள்வதற்குப் பலமுறை



ஒரே காட்சியைப் படம்பிடிக்கவேண்டியநிலையும் ஏற்படுவதுண்டு. இவற்றின்மூலம் 'பிலிம்' வீணடிக்கப்படுகின்றது. டிஜிற்றல் கமராக்களில் நமக்கு வேண்டாத படங்களை உடன் அழித்துவிடமுடியும். உலகின் புகழ்பெற்ற சஞ்சிகையான நசனல் ஜியோகிராபி (NATIONAL GEOGRAPHY) கட்டுரை ஒன்றிக்காக சிலவேளைகளில் 350 படச்சுருள்களையும் பாவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

சாதாரண கமராக்களில் பாவிக்கப்படும் பிலிம்களின் மூலம் சிறந்த புகைப்படங்களை எடுத்துக்கொள்வதற்கும், அவற்றை உபயோகப்படுத்துவதற்கும் ஓரளவு புகைப்படம் தொடர்பான அறிவு தேவைப்படுகின்றது.

குறைவான ஒளியில் போதிய வெளிச்சத்தை ஏற்படுத்திக்கொள்ளுதல், கூடிய வெளிச்சத்தில் அவற்றைக் கட்டுப்படுத்திக்கொள்ளுதல், விம்பத்தைச் சரியான முறையில் குவித்துக்கொள்ளுதல் (FOCUS) ஆகிய முக்கியமானதாகும்.

மேலும் படச்சுருளை இருளில் கழுவிக்கொள்ளுதல், படத்தைத் தெளிவாகப் பிரதிசெய்துகொள்ளுதல் முக்கியமானதாகும். இவற்றிற்கு அதிக நாட்களும் தேவைப்படுகின்றது.

படம் ஒன்றை உடன் தேவைப்பட்டால் இதுவரை பொலொறைட் கமராக்களையே (Polaroid) நம்பியிருக்கவேண்டியிருந்தது. குறைவான வெளிச்சத்திலும் தரமான படங்களை 'டிஜிட்டல்' கமராக்களில் எடுத்துக்கொள்ள முடியும்.

# அழித்தல் தொழில்

உலகின் தென்பிராந்தியத்தில் இருக்கின்ற சமுத்திரத்தில் காணப்படுகின்ற மீனினங்கள் - சட்டபூர்வமற்ற மீனவர்களால் வேட்டையாடப்படுவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. பெரும்பாலும் அவுஸ்ரேலியாவின் கரையோரங்களில்தான், இந்தச் செயற்பாட்டினைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவுஸ்ரேலியா அண்மையில் கடும் ஆயுதங்களைக்கொண்டு,



மீன்பிடித்தலைத் தடைசெய்திருக்கிறது. அந்தாட்டிக்காக் கண்டத்தில் காணப்படுகின்ற 'வைட்கோல்ட்' என்ற மீனிணம கூடுதலான கிராக்கியை உலகச்சந்தையில் பெறுகின்றது. ஆனால, இத்தகைய மீனிணங்கள் சட்டபூர்வமற்ற முறையில் பிடிக்கப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. மீனிணங்கள் மட்டுமல்ல, கடற்பறவைகளும் அந்தாட்டிக்கா கரையோரத்தில் கொல்லப்படுகின்றன. ஏறக்குறைய 100,000 கடற்பறவைகள் அங்கே காணப்படுகின்றன. ஆனால், அவை தொடர்ச்சியாகக் கொல்லப்படுவதனால், அங்கே எஞ்சியிருப்பவை மிகவும் குறைவானவையாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாது, அழகான தென்பகுதிக் கடற்கரை - பயம் பொருந்திய இடமாக மாறிக்கொண்டு வருவது மிகவும் கவலைக்குரிய விடயம்தான்.

# கரை தட்டும் டொல்பின்கள்



மீன்பிடிக்கும் தொழிலில் நவீனமுறைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாகப் பாரிய வலைகளைக் கடலின் கீழ்ப்பரப்பில் விரித்து மீன்பிடிக்கும் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றினால் டொல்பின், திமிங்கலம் ஆகிய கடல் வாழ் பாலூட்டி இனங்கள் (MAMMALS) பாரியளவில் பாதிப்படைகின்றன. இங்கிலாந்து, பிரான்சின் வடக்கு - தெற்குப்பகுதியில் மாரிகாலத்தில் அதிகளவில் இறந்த மீனகள் கரை ஒதுங்குவதையும், கடல்வாழ் இனங்களின் பாதுகாப்பு அமைப்பினர் அவதானித்துள்ளனர். கூரிய மூக்கினையுடைய டொல்பின்கள் (BOTTLE NOSE DOLPHIN) மூக்கின் முனைப்பாகம் உடைந்தநிலையில் கரை ஒதுங்குவதையும், செட்டைகள் காயப்பட்டநிலையில் காயங்களினால் மரணமடைவதையும் அவதானித்துள்ளனர்.

தகரங்களில் அடைப்பதற்குப் பயன்படுத்தும் மீனினங்களான ரூனா (TUNA), மக்கிறல் (MACKREREL) ஆகிய இனங்கள் அழிவின் எல்லைக்கு வந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேறு மீனினங்கள் கரை ஒதுங்காமல், கடலின் அடிமட்டத்தில் இறந்து கிடப்பதையும் அவதானித்துள்ளனர்.

இரு மீன்பிடிக்கும் கப்பல்களை உபயோகித்து, பாரிய வலைகளைக் கடல்மட்டத்தின் கீழ்பாகத்தினூடாக இழுத்துச் செல்லும்போது, அதிகளவில் கடல்வாழ் உயிரினங்கள் இவற்றுள் சிக்கி மடிவதாகவும், கடல்வாழ் உயிரினங்களின் பாதுகாப்பு அமைப்புகள் அறிவித்துள்ளன.

# அழிவை நோக்கி பறவைகள்

நவீன விவசாயமுறைகள், ஐரோப்பாவில் 24 இற்கு மேற்பட்ட பறவை இனங்களை, அவற்றின் தொகையின் மூன்றில் ஒன்றாகக் குறைந்துவிட்டதாகப் பறவைகள் தொடர்பாக ஆய்வில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மேலும், நவீன விவசாயமுறைகளில் ஈடுபட்டுள்ள நாடுகளில் - பறவையினங்கள் அரிதாகிவருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பியன் இணையத்திலுள்ள 10 நாடுகள் இணைந்து ஏற்கனவே அந்த இணையத்திலுள்ள சில நாடுகளின் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்குத் திட்டமிட்டுள்ளன. பாரியளவில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளின் சூழலை (ENVIROMENT) உள்ளடக்கியதாகப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளுமாறு ஐரோப்பிய இணையத்தினை சம்பந்



தப்பட்ட நாடுகளிடம் வலியுறுத்துமாறு, பறவைகள் தொடர்பான முறையான தீர்மானங்கள் எடுக்கப்படாமல், மேலும் பறவைகளின் வாழ்விடங்களை (HABITAT) அழித்துப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டால், விரைவில் மேலும் பல அரிய பறவையினங்கள் அழிந்து போகலாமெனப் பறவைகள் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

# கோழிகளுக்கு தேவை வீடு



கூடுதலான கோழிகளைக் குறைந்த பரப்பளவுடைய பிரதேசத்தில் பண்ணைகளில் வளர்க்கும்போது, கோழிகள் அதிகளவில் பாதிப்படைவதாக ஐரோப்பிய ஆணையம் அணமையில் நடத்திய ஆய்வுகளின்மூலம் அறிந்து கொண்டுள்ளது.

பண்ணைகளில் பறவைகளின் எச்சங்கள் (LITTER), ஈரலிப்புத்தன்மை, போதிய காற்றோட்டம் இன்மை போன்றவற்றாலும் கோழிகள் பாதிப்படைவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவல்களை நேச்சர் (NATURE) என்ற சஞ்சிகை பிரசுரித்துள்ளது. இறைச்சிக்காக வளர்க்கப்படும் புரொயிலர் (BROILER) என்ற இனமே, முக்கியமாக ஆய்விற்கு உட்படுத்தப்பட்டது. ஒரேயளவான பிரதேசத்தில், வேறுபட்ட எண்ணிக்கையில் கோழிகளை வளர்த்து ஆய்வினை மேற்கொண்டிருந்தனர்.

ஈரலிப்பின் அளவும், எச்சங்களில் தோன்றிய அமோனியாவின்செறிவும், கோழிகளின் ஆரோக்கியத்தை பரந்தளவில் பாதிப்பதாகத் தெரிவித்திருந்தனர்.

இந்தக் கோழிகளின் கால், பாதம் ஆகிய பகுதிகளின் நோயின் பாதிப்புக்கள் தென்பட்டதாகவும் தெரிவித்திருந்தனர்.

வெப்பநிலையில் ஏற்படும் மாறுதல்களும் பாதிப்பின் காரணிகளாக அறிந்துகொண்டனர். மேலும் கோழிகளின் மன அழுத்தத்திற்கான ஹோமோன்களும் (HORMONES) அதிகரித்துக் காணப்பட்டன.

குறிப்பிட்ட பரப்பளவில், கூடுதலாக கோழிகள் அடைத்து வைக்கப்படும் நிலையில், கோழிகள் குறைவான ஆரோக்கிமுள்ளதாகக் காணப்பட்டது.

# வாரம் ஒரு யோகாசனம்

## திராடம்



முதல்நிலையாக விரிப்பின்மீது பத்மாசனம் போடவும். திராடம் என்பது ஒரு குறிப்பிட்ட பொருளை இலக்கடைவதுதான், ஒரு இலட்சியப்பாதை, ஒரு இடத்தில் ஒரு இறைவனுடைய படத்தை வைத்துவிட்டு அந்த உருவத்தைக் கண்கொட்டாமல் உற்றுப்பார்க்கவும், கண்கள் கலங்கிக் கண்ணீர் வரும்போது கண்களை மூடி, கண்ணிற்கு சற்று ஓய்வு கொடுக்கவேண்டும். பின் ஒருசுவரில் ஒரு கறுப்பு வட்டம் போடவும், அந்தக் கறுப்பு வட்டத்தைக் கண்கொட்டாமல் உற்றுப்பார்க்கவேண்டும். அந்த வட்டம் சிறிது காலங்களில் கண்ணுக்கு எட்டாமல் மறையும். பின் வானத்திலுள்ள நட்சத்திரத்தை உற்றுப் பார்க்கவேண்டும். ஒரு நட்சத்திரத்தை மாத்திரம் உற்றுப்பார்க்கவேண்டும. சில மாதங்களில் கண்ணுக்குத் தெரியாமல் மறையும் பின் கண்களைமூடி, மனக்கண்களால் நெற்றிப் புருவ மத்தியில் தேவனுடைய உருவத்தை அமைத்து, அந்த உருவத்தை மனக்கண்களால் பார்க்கவேண்டும். சிறு காலங்களில் ஒரு ஒளி புருவமத்தியில் தோன்றி மறையும். தேவன் காட்சி அளித்தால் கண் பிரகாசிக்கும்.

### நன்மைகள்

கண் பார்வைகள் பிரகாசிக்கும். கண்ணாடி அணியத்தேவையில்லை. கண்களின் சுரப்பிகள் சீராக வேலை செய்யும். கண்ணுக்கு அதிகமான இரத்தம் போய்ச்சேரும், ஒவ்வொரு நாளும் ஒவ்வொருமணித்தியாலம் செய்தால் போதுமானது. மூன்று வருடம் தொடர்ச்சியாகப் பயிற்சியின் எண்ணிக்கையைக் கூட்டிக்கொண்டால் கண் ஒளி வீசும். முகம் புதுப்பொலிவு உண்டாகும். தேகப் பொலிவு உண்டாகும். எந்த நோயும் உண்டாகாது. மனம் ஒரு நிலையாகும். ஞாபகசக்தி அறிவாற்றல் அதிகமாகும். கெட்ட சிந்தனை அழிந்துபோகும். மாற்றாருக்கு உதவிசெய்யும் மனப்பான்மை உண்டாகும். குடும்பக் கட்டுப்பாடு உருவாகும். கணவன் - மனைவி, சகோதரம் போல பாசமாக வாழ்வார்கள் தாய்ப்பாசம் அதிகமாகும். போதிக்கும் சக்தி உருவாகும்.

*தருபவர்* - மா.மகாநேசன்.

## உள்ளதைச் சொல்வோம்... - யதார்த்தன்





# நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்...!

**எங்கே எமது காத்திரமான இலக்கியப் படைப்புக்களை எடை போடின் தமது இருப்பு கேள்விக்குறியாகிவிடுமோ என உள்ளூரப் பயம் அவர்களுக்கு. பொதுவாக வெள்ளைத் தோலைக்கண்டு மிரளும் எமது சமூகத்தில், இலக்கியவாதிகள் சிலர் இந்தியர் களைக் கண்டும் மிரள்கின்றார்கள். இது வேதனையானவிட யம். இந்தியக் கலைஞர்களை எழுத்தாளர்களை வரவேற்கப் போய் எமது கலைஞர்களை விலை பேசிவிற்கும் நிலைக்கும் சிலர் மாற்றிவிட்டார்கள்.**

**வி**டுதலைப் புலிகளுக்கும் இலங்கைப் பிரதமர் ரணில் தலைமையிலான அரசிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் சொல்லக் கூடிய அளவில் நிகழ்ந்த மாற்றங்களில் ஏ - 9 நெடுஞ்சாலைத் திறப்பைக் கூறமுடியும். இந்தப் பாதை சமாதானப்பாதையாக வடக்குக்கும் தெற்குக்கும் இருந்து வருகிறது. பாதை திறப்போடு பாதையின் வழியே நிரந்தர சமாதானம் வருமென வழிமேல் விழிவைத்து காத்திருந்தார்கள் குடாநாட்டு மக்கள்.

ஆனால், சமாதானம் வந்ததோ என்னவோ. வேறு பலர் வந்தார்கள். அஃறிணை உயர்திணையென, இருபகுதியினருமே வந்தார்கள். பாதையால் வரப்பயந்த சிலர் யாழ்ப்பாணத்திற்கு வரப்பயப்படாமையால், வான் வழியாக விமானத்தில் வநதார்கள். வந்தவர்கள் பலரைச் சந்தித்தார்கள். பலரைக் கேட்டறிந்து கொண்டார்கள். ஒருசிலர் ஏதோ கொடுப்பதற்கு வந்தவர்கள்போல் காட்டி நிறைய எடுத்துச் சென்றார்கள். இதே நிலமை இன்றும் தொடர்ந்த வண்ணம் தான் உள்ளது.

குறிப்பாக, வெளிநாட்டவர்கள் பலரின் வருகை அரசியல் சார்ந்ததாக அமைந்தாலும், ஒரு சிலரின் வருகை வாழ்வியல், கல்வியியல், கருத்தியல் சார்ந்ததாக அமைந்திருந்தது. அண்டை நாடான இந்தியாவில் இருந்து பலர் மேற்சொன்ன காரணங்களுக்காக ஈழத்திற்கு வந்தார்கள். பலரையும் தொடர்புகொண்டு கலந்து பேசிச் சென்றார்கள். இவ்வாறு வந்துசென்றவர்களில் பலர் இங்கு நின்றுகொண்டு ஒரு கருத்தை வாய் வழியாகவும், மீண்டும தம்நாடு சென்று இன்னொரு கருத்தை எழுத்து வழியாகவும் தெரிவித்து வருகின்ற வழமையை இந்திய சஞ்சிகைகளைப் படிப்பவர்கள் காணக் கூடியதாகவுள்ளது.

இதனைக் காணும் எமது மூத்த இலக்கியவாதிகள் எனத் தம்மைக் கூறிக்கொள்வோரும் சிறுபுன்னகையோடு முழுவதையும் வாசித்து முடிந்தபின் வாசலைப் பார்க்கிறார்கள். இன்னொருவர் வருவாரா? இன்னும் தாம் ஏதேனும் இடக்கு முடக்காகச் சொல்வதற்கென. இதுதான் யாழ்ப்பாண இலக்கிய சமூகத்தின் இன்றைய யதார்த்த நிலையாகவுள்ளது.

இந்தநிலையை, அவ்வப்போது நடைபெறும் இந்திய இலக்கியப் பிரமுகர்களுடனான சந்திப்புக்களின்போது காணமுடிகின்றது. அண்மையில் இந்திய சஞ்சிகையான குமுதம் இதழின் இன்னொரு வெளியீடான தீராநதி இலக்கியப் பத்திரிகையில், ஆசிரியர் தளவாய் சுந்தரம் வந்திருந்தார். இவர் இங்கு வந்து பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சி அளித்ததாகச் சொல்லப்படுகிறது. பத்திரிகையாளர் பயிற்சிக்குப்பின் - யாழ். பல்கலைக்கழகத்திலே பத்திரிகையாளர் இலக்கிய கர்த்தாக்கள் என ஒரு குழுவினரையும் இவர் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வந்துசென்ற அவர் தமிழ்நாட்டிலே - ஏதோ நல்லதை எழுதுவார் எனப்பார்த்தால், போயும் போயும் யாழ்ப்பாணத்திலும் மன்மதராசா என எழுதியிருக்கிறார். பலரையும் மன்னித்தது போல அவரையும் மன்னிப்போமாக.

யாழ்ப்பாணத்திலே எழுதவேண்டிது நிறையவே உள்ளது. ஆனால், அதையெல்லாம் விடுத்து இந்திய சஞ்சிகைக் கலாசாரமான சினிமாப் பாணியிலே மன்மதராசா பற்றி எழுதியுள்ளார். இதற்கு எமது மண்ணைச் சேர்ந்த ஒரு சிலரும் காரணமாக இருக்கலாம் என எண்ணுகின்றோம். ஏன் எமக்கு இந்தச் சிந்தனை எழுகிறது எனில், தளவாய் சுந்தரத்துடனான சந்திப்பின்போது, எமது ஈழத்து இலக்கிய தரத்தை எம்மவர்கள் சிலரே எடை போட்டுக்காட்டி குறைத்து மதிப்பிட்டார்கள். ஏனெனில், அவர்கள் எடை போட எடுத்துக்கொண்ட விடயங்களோ சில்லறையானவை.

எங்கே எமது காத்திரமான இலக்கியப் படைப்புக்களை எடைபோடின் தமது இருப்பு கேள்விக்குறியாகிவிடுமோ என உள்ளூரப் பயம் அவர்களுக்கு. பொதுவாக வெள்ளைத் தோலைக்கண்டு மிரளும் எமது சமூகத்தில், இலக்கியவாதிகள் சிலர் இந்தியர்களைக் கண்டும் மிரள்கின்றார்கள். இது வேதனையான விடயம். இந்தியக் கலைஞர்களை எழுத்தாளர்களை வரவேற்கப் போய் எமது கலைஞர்களை விலைபேசி விற்கும் நிலைக்கும் சிலர் மாற்றிவிட்டார்கள். தளவாய் சுந்தரத்துடனான சந்திப்பின்போதும் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவருக்கும், பத்திரிகையாளர் ஒருவருக்கும் இடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது. இதனைக் காரசாரம் என்பதைவிட, சுவாரஸ்யம் என்பதே பொருத்தமானதாகும்.

தீராநதி சஞ்சிகை பற்றி அறிந்து கொணடவர்கள் எம்மிடையே அரிது. எனவே, அந்தச் சஞ்சிகையைப் பற்றி எம்மவர்கள் அறிந்துகொள்ளவும் அதற்கு ஆக்கங்களை அனுப்பி எமது நிலையின் கோலததை தமிழகத்தில் மட்டுமல்லாது உலகெங்கும் சொல்லவும் ஏன்? யாழ். பல்கலைக்கழகம் ஒரு இணைப்பு மைய மாகச் செயற்படக் கூடாதென நியாயமானதொரு கேள்வியையே குறித்த பத்திரிகையாளர் எழுப்பினர். ஆனால், இதற்கு விரிவுரையாளர் ஒருவர் அதிகம் கோபப்பட்டு பேசிக்கொண்டார். அந்த உரையாடலை இங்கே குறிப்பிடுவது பொருத்தமானதென எண்ணுகிறோம்.

பத்திரிகையாளர் இவ்வாறு- தான் தனது வினாவைத் தொடுத்தார். இலங்கையிலுள்ள இளம் எழுத்தாளர்கள் எழுதுகின்ற விடயங்களைத் தீராநதிக்கு அனுப்புவதற்கு ஒரு இணைப்பு மையமாக, ஏன் பலகலைக்கழகம் இயங்கமுடியாது? இலங்கையிலுள்ள இளம் எழுத்தாளர்கள் மிகுநத ஆர்வத்தோடு இருக்கிறார்கள். இதனை ஏன் ஒரு சேவையாகக்கருதி, பல்கலைக் கழகம் செய்யமுடியாது. பல்கலைக்கழகம் மூலமாக நிச்சயமாக இதனைச் செய்யலாம் என நான் நினைக்கிறேன்.

உங்களுக்கென ஒரு மையத்தை இங்கே போட்டால் - இங்கு அனுப்பபபடும் ஆக்கங்களை அவர்கள் தெரிவுசெய்து தகுதியானவற்றை உங்களுக்கு அனுப்புவது இலகுவாக இருக்குமல்லவா? பின் அவற்றை தீராநதியிலே பிரசுரிக்கலாமே.

இதற்குக் குறித்த விரிவுரையாளர்கள் அவசர அவசரமாக,

தற்போது அப்படி ஒரு தேவை இல்லைத்தானே. தீராநதி பத்திரிகையை எடுத்தால், அதில் அதன் 'போஸ்ரல் அட்ரஸ்' இருக்கு. ஈமெயில் முகவரி தந்திருக்கினம் யாருடன் தொடர்புகொள்ள வேணடும். யாருக்கு ஆக்கங்களை அனுப்ப வேண்டும் என்றெல்லாம் உள்ளது. உங்களுக்குத் தேவையென்றால் ஒரு விண்ணப்பத்தைப் போடலாம்தானே. அதற்கு ஒரு மையம் தேவையில்லைத் தானே? என சாட்டுச்சொல்லித் தட்டிக் கழித்தார். இதனை ஏற்க மறுத்த பத்திரி கையாளர்-

இலக்கிய ஆர்வமுள்ள எல்லோருக்கும் ஈமெயில் வசதி உண்டென்று இல் லைத் தானே என எதிர்கேள்வி தொடுத்தார்.

தீராநதிக்கு ஒரு முகவரி உண்டு. அந்த முகவரிக்கு ஆக்கங்களை அனுப்பச சொன்னால் அவர்கள் அனுப்பத்தான் வேண்டும். தீராநதிக்கு எழுதுகின்றவர்கள் அந்த நிறுவனத்திற்கு ஆக்கங்களை அனுப்பிக் கொண்டுதான் இருக்கினம். அப்படி அனுப்ப முடியாத நிலையில் எத்தனை பேர் இருக்கினம் சொல்லுங்கோ பார்ப்பம். அப்படி ஒருத்தரும் இல்லை. அப்படி இருந்தால் நாங்கள் உதவி செய்யத் தயாராக இருக்கின்றோம். உண்மையாக அனுப்பவேண்டும் என்ற தேவையுள்ளோர் அனுப்பித்தான் ஆகினம் என கொஞ்சம் சூடாகப் பதிலளித்தார் விரிவுரையாளர்.

நீங்கள் இவ்வளவு ஆத்திரப்படவேண்டிய அவசியம் நான்கேட்ட கேள்வியில் இல்லையே....! எனப் பத்திரிகையாளர் முடிப்பதற்கிடையில் இடையிலே ஒரு குரல் அனுப்பினா அதற்குப் பதில் வரவில்லை என்பதும் ஒரு பிரச்சினையாக இருக்குதே என்றதும் விரிவுரையாளர் - "அதுதான் இங்க பிரச்சினையெண்டால் அனுப்பிறதிற்குப் பதில் வரவில்லையென்பது இதைக் கதைக்கிறது வேற விசயம். இதைவிட்டிட்டு அனுப்பிறதிற்குப் புறோக்கர்வேலை பாரெண்டு கேட்கிறீரகள்' எனப்பொரிந்து தள்ளினார்.

பத்திரிகையாளரோ, நீங்கள் ரொம்ப ஆத்திரப்பட்டு கதைக்கிறீர்கள். ஆவேசப்படுகின்றீர்கள். இது பல்கலைக்கழகத்திற்கே உரித்தான இயல்பான சுபாபமாக இருக்கலாம். அதை விடுவம்.

நான் கேட்பது ஊக்குவிக்க வேண்டுமென்பதுதான். இளம் எழுத்தாளர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் என்பதே எமது நோக்கமென விடாமல் தொடர்ந்தார். அவரை மறித்த விரிவுரையாளர் இந்த விடயத்தைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகத்தை இதில் இழுக்க வேண்டிய தேவையில்லையென சற்று உரத்துச்சொல்ல இதுவந்து பல்கலைக்கழக் கழகம் பற்றிய சர்ச்சை இல்லையென பதில் வந்தது பத்திரிகையாளரிடமிருந்து.

உங்களுடைய பத்திரிகைகள் இருக்குதுதானே. அந்தப் பத்திரிகைகளிலை ஏன் ஒன்று இதைச்செய்யக்கூடாது. பல்கலைக்கழகத்திற்குள்ளதான் செய்ய வேணுமே. எத்தனை பத்திரிகைகள் இங்கை இருக்குது... என விரிவுரையாளர் சவால் விடுவது போலக் கேட்டார்.

தாராளமாக, நாங்கள் இத்தகைய பணியை தமிழோசைக்கு செய்யப்போறம். நாங்கள் செய்யத் தயாராக இருக்கின்றோம் என சாதகமான பதிலளித்தார் பத்திரிகை நண்பர்.

அது வேறவிசயம். இப்ப எவரும் பல்கலைக்கழகத்தைப் பற்றி கதைக்கத் தேவையில்லை எனக் குறுக்கிட்டார் விரிவுரையாளர்.

பல்லைக்கழகம் எப்ப தனியார் சொத்தானது. பல்கலைக்கழகம் ஒரு பொதுச் சொத்து, அதைப்பற்றி பேசக்கூடாது என்றளவிற்கு எப்ப மாறினது என உணர்ச்சி ததும்பப் பேசினார் பத்திரிகையாளர்.

சரி, பல்லைக்கழகம் பொதுச்சொத்து. அப்ப இண்டைக்குக் காணி விற்கிறதைப் பற்றியும், கலியாணம் பேசுகிறதைப் பற்றியும் ஒருமையம் திறக்கலாம் எண்டு சொலலுவியள் போலக்கிடக்கு என இழுதத விரிவுரையாளர் முடிப்பதற்கிடையிலேயே,

இப்பவும் அதுதானே இங்கை நடக்குது. அதை விடுங்கோ. எங்களுக்கு அதால ஒரு பிரச்சினையுமில்லை. நான் கேட்டது ஒருமையமாகச் செயற்படுங்கோ என்று தானே எனப்பத்திரிகையாளர் சொலல, வுந்திருந்தோர் மத்தியில் ஒரு சிரிப்புத் தோன்றிமறைந்தது. யதார்த்த பூர்வமாக யோசிக்கவேணும். தீராநதி ஒரு அரசியல் பத்திரிகை. எங்களுக்கெண்டு ஒரு அரசியல் இருக்கு. நாளைக்கு தீரா நதி பத்திரிகையினருக்கு மோசமான செய்தி போய்ச் சேர்ந்தது எண்டால் பல்கலைக்கழகத்தில் ஒரு மையம் இயங்கி, அதனூடாக அது போய்ச்சேர்ந்தது எண்டால் தளவாய் சுந்தரத்திற்கு நானும் பதில சொல்ல வேண்டிவரும் என இன்னொரு விரிவுரையாளர் தம்பக்க நியாயத்தைச் சொன்னார்.

வெளியில் இருந்து எத்தனையோ நிறுவனங்களைக் கூட்டிவந்து இதற்குள்ளை வைத்து இருக்கினம். காசு வருகுது எண்டதாலை. ஆனால் இதைச் செய்யமட்டும் எல்லோரும் தயங்கினம். அதுதான் ஏனெண்டு கேட்கிறன் என தனக்கேயுரிய பாணியில திருப்பித்தாக்கினார் பத்திரிகை நண்பர்.

இந்தவிடயத்தை இத்தோடு முடியுங்கோ, தீராநதி தொடர்பான வேறு கேள்வி இருந்தாக் கேளுங்கள் என விவாதத்திற்கு முடிவு வைக்க எண்ணினார் மூத்த விரிவுரையாளர் ஒருவர். யாரையும் இதில் குறை சொல்ல முடியாது. கண்ணுள்ளவர்கள் பார்த்தார்கள். காதுள்ளவர்கள் கேட்டார்கள் 'தற்ஸ் ஓல்' அவ்வளவுதான். என்றார் இளம் விரிவுரையாளர் ஒருவர்.

இதை வைத்துப்பார்த்தால் யாருமே புதிதாக யாரையும் உருவாக்க விரும்பவில்லை அப்படித்தானே? என விடாமலே தொடர்ந்த பத்திரிகையாளர் பின் தீராநதி தொடர்பான விடயங்களுக்குள் சென்றுவிட்டார். இந்த விவாதத்தை அமைதியாக பார்த்துக்கொண்டிருந்த தளவாய் சுந்தரம் இதைப்பற்றி தனது பாணியிலே என்ன இனி எழுதப் போகிறாரோ அது அவருக்கே வெளிச்சம்.

இவ்வாறு பிறதேசத்துக் கலைஞர்கள் மத்தியிலே எம்மவர்கள் மோதிக்கொள்வதும், எமது கலைஞர்களை இளக்காரமாக எண்ணி அலைக்கழிப்பதும் தொடருமாக இருந்தால், நாம் வெகுதூரத்திற்கு அடித்துச்செல்லப்பட்டு விடுவோம். இவ்வாறான சம்பவம் ஒன்றும் அண்மையிலே யாழ்ப்பாணத்திலே நடந்தது.

தென்னிந்திய திரைப்பட நடிகரும் இயக்குநருமான மணிவண்ணன் யாழ்ப்பாணம் வரும்போது சிலர் அவரது வருகையை தமது வியாபாரமாக்க முனைந்தார்கள். அதனால் அவருக்குத் தெரியாமலேயே அவருககான வரவேற்பு வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்து யாழ்ப்பாணத்தின் கலைஞர்கள் சிலரையும், பிரமுகர்கள் பலரையும் அழைப்பிதழ் ஒன்றுக்கு ஒருவர் எனும் வீதத்திலே அழைத்தும் உடற்பரிசோதனையில்லாத குறையாகப் பரிசோதித்து வரவேற்பு விழா நடைபெறவிருந்த மண்டபத்திற்கு அனுப்பியும், தற்செயலாக ஏதேனும் கலவரம் நடக்கலாம் எனும் அச்சத்திலே அம்புலன்ஸ் வண்டி சகிதம் பொலிஸாரையும் வரவழைத்தும் இறுதியிலே மணிவண்ணன் வரவில்லை. நிகழ்சசி ஏற்பாட்டாளர்கள் மூக்குடைபட்டதுதான் மிச்சமானது. மணிவண்ணன் சந்திப்பு பின்னர் நகரப்பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில நடைபெற்றது. அந்தச் சந்திப்பும் சரியான முறையிலே திட்டமிடப்படவில்லை.

முதல் குறிப்பிட்ட ஏற்பாட்டாளர்கள் வரவழைத்த எங்கள் கலைஞர்களும், பிரமுகர்களும் பின்னர் குறித்த ஹோட்டலுககு வரவேண்டியதாயிற்று. அவர்களுக்கோ வீண் அலைச்சல். பல்கலைக்கழக பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள்கூட வீணாக அலைந்தார்கள். ஹோட்டலிலும் நிகழ்வு சரியான திட்டமிடல் இன்றி நடைபெற்றமையால் ஊடகவியலாளர்கள் உட்படப் பலரும் சிரமப்படவேண்டியதாயிருந்தது. இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்வோர் இனியாவது இது தொடர்பாக சிந்திப்பது நன்மையளிக்கும் விடயமாக விருக்கும்.

பிறதேசத்துக் கலைஞர்களை வரவேற்பதும் அவர்களை சந்தித்து கருத்துப்பரிமாறுவதும் தவறென நாம் ஒரு போதும் சொல்லப்போவதில்லை. ஆனால் அவ்வாறான சந்திப்புக்களின் போது, எங்கள் கவிஞன் மஹாகவி உருத்திரமூர்த்தி சொன்ன 'நாமும் நமக்கோர் நலியாக் கலையுடையோம்' எனும் கவிவரியை மறக்காமல் இருப்பது இன்று மட்டுமல்ல என்றுமே நன்மைபயக்கும் ☆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒரு தலையா
உள்கோட்டம் இன்மை பெறின்.

திருக்குறள்

# நமது நோக்கு

## காலக்கெடுவும், கெடுகாலமும்..

தற்போது நாட்டின் அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலைக்கு அடுத்த மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் தீர்வு காணப்படாவிட்டால், அது நாட்டிற்குப் பாரிய அச்சுறுத்தலாக அமையும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

இது அவர் ஜனாதிபதிக்கு விடுத்துள்ள ஆகப் பிந்திய காலக்கெடுவாகும்.

அமைச்சுப் பறிப்புக்களைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் காரணமாக ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து, இம்மாதிரியான எச்சரிக்கையுடன் கூடிய காலக்கெடுக்கள் பலவற்றை ரணில் விடுத்து வந்துள்ளபோதிலும், அதுகுறித்து ஜனாதிபதியோ, அல்லது அவரது செயலகமோ, எந்தவொரு வகையான பிரதிபலிப்பையும் காட்டியது கிடையாது.

இன்னும் சொல்வதானால், ரணிலின் எச்சரிக்கையை அவர்கள் எந்தவகையிலும் பொருட்படுத்தியதில்லை என்பதை ஜனாதிபதியின் தொடர் செயற்பாடுகள் நிரூபித்து வருகின்றன என்பதே உண்மையாகும்.

மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பறிமுதல் செய்த சம்பவத்திலேயே, ஜனாதிபதி பிரதமரை எந்த விதத்திலும் ஒரு பொருட்டாகக் கருதவில்லை என்பது தெளிவாகியிருந்தது.

அவர் அதனை சட்டரீதியிலான ஒரு அரசியல் நடவடிக்கையாகக் கருதியிருப்பாரேயானால், ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இருந்த சமயத்தில் அதனை மேற்கொண்டிருக்க முடியும்.

ஆனால், அவர் அந்த விடயத்தில் ஒரு கண்ணியமான அரசியல்வாதியாக நடந்துகொள்ளாது, ஒரு மூன்றாந்தர அரசியல்வாதியாகவே நடந்து கொண்டார்.

இந்த முதல் சம்பவமே போதும், ஜனாதிபதியின் அரசியல் ஜனநாயகத் தன்மையின் நேர்மையை மதிப்பீடு செய்வதற்கு...

இதனை தொடர்ந்து அவர் மேற்கொண்ட ஒவ்வொரு நகர்வும், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அரசியல் சதியின் தொடர் நிகழ்வாகவே அமைந்து வருகின்றன என்பதைத் தெளிவாக உணரக்கூடியதாகவுள்ளது.

ஜனாதிபதி தேசத்தின் பாதுகாப்புக்கருதி, தாம்மேற்கொள்வதாகக்கூறும் ஒவ்வொரு செயற்பாடும், தன்னையும், தனது அதிகாரத்தையும், பதவியையும் பாதுகாத்து, தொடர்ந்து அதனைத் தக்கவைத்துக் கொள்வதற்காக அவரின் முனைப்பினை உறுதி செய்வதாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதைய ஜே.வி.பியுடனான கூட்டணி அமைப்பு முயற்சியும், இத்தகைய தன்மை கொண்டதேயாகும்.

இதிலும் தேசிய நலன் மட்டுமல்ல தனது கட்சியின் பாரம்பரிய கொள்கைகளும்கூட ஜனாதிபதியால் புறக்கணிக்கப்பட்டுள்ளதுடன், தனது சொந்த அரசியல் இருப்பின் ஸ்திரத்தன்மையை மட்டுமே கருத்தில் கொண்டு செயற்பட்டுள்ளார் என்பதில் ஐயமில்லை.

இல்லையேல், கொள்கைரீதியில் மட்டுமல்ல, சகல விதத்திலும் முற்றிலும் முரண்பாட்டுத் தன்மைகளைக் கொண்ட ஒரு கட்சியுடன் - அதனுடனான நீண்ட காலப் பகையுணர்வை தூக்கியெறிந்துவிட்டு, பல்வேறுபட்ட அவமானகரமான விமர்சனங்கள், கண்டனங்கள், எதிர்ப்புக்கள் ஆகியவற்றிக்கு மத்தியிலும், சுயமனவிருப்பின்றி, வெறுமனே சுயநல இலக்குடன் இந்த உடன்பாட்டை மேற்கொண்டிருப்பாரா?

அவரின் சுயவிருப்பின்மையை - உடன்பாடு கையெழுத்தான வேளையில் அவர் பிரசன்னமாயிருக்காமையும், சோமவன்ச உடன் அவரைச் சந்திக்க விரும்பியதை மறுத்துள்ளமையும் எடுத்துக் காட்டும்

எல்லாவகையிலும் ஜனாதிபதி தனது சுயநலத்தின் அடிப்படையிலேயே நகர்வுகளை மேற்கொள்கிறார் என்பது தெளிவான நிலையில், பிரதமரின் காலக்கெடு விதிப்பு அச்சுறுத்தல் சந்திரிகாவுக்கு எந்தவிதமான தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்பதுதான் உண்மையாகும்.

அரசியல் நெருக்கடிநிலை, இலங்கைக்குக் கடன் வழங்கும் நாடுகள் மற்றும் அமைப்புகளின் முடிவை மீளாய்வு செய்யும்நிலை ஏற்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்ட நிதி கிடைக்காமற் போகலாம் என்பது ஒருபுறமிருக்க, இந்த மீளாய்வு அணுகுமுறை சிறிலங்காவின் அதிகாரவர்க்கம் சமாதானத்தை விரும்பவில்லை என்ற கருத்துருவாக்கம் சர்வதேச மட்டத்தில் உருவாக வழிவகுத்துவிடும் என்பதே ஆய்வாளர்களின் கருத்து.

அது மட்டுமல்லாது, சிறிலங்காமீதான சர்வதேசத்தின் அக்கறை குறைந்து, அதன் மீதான அழுத்தங்கள் அதிகமாகும் சூழலும் தோன்றத் தொடங்கியுள்ளமையானது, எதிர்கால நலனுக்கு உகந்த தல்ல என்பதும் அவர்களின் எண்ணப்பாடாகும்.

ஆனாலும் என்ன? மூர்க்கனும், முதலையும் கொண்டது விடாதென்ற நிலையில் சந்திரிகாவும், ரணிலும் மேற்கொண்டுவரும் அதிகாரப் போட்டியில், பாதிக்கப்படப் போவது சிறிலங்காவினதும், சமாதானத்தினதும் எதிர்காலம் மட்டுமே.

## நாடும் நடப்பும்




# வலுவான விருட்சமாக வளர்ந்துள்ள தமிழீழ நீதி நிர்வாக கட்டமைப்பு!

### அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

எமது தேசியத் தலைவரினால் மக்களின் உயர்ந்த வாழ்வைக் கட்டியெழுப்பவும், பண்பாட்டைக் கட்டியெழுப்பவும் சரியான நியாயமான சட்டமுறையின்கீழ் கட்டியெழுப்பப்பட்ட தமிழீழ நீதி நிர்வாகத்துறை - இன்று எமது தேசத்தின் வலுவான நீதி நிர்வாகமாக விருட்சமாக வளர்ச்சி பெற்றுள்ளது என, தமிழீழ, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

தமிழீழ சட்டக்கல்லூரியிலிருந்து வெளியேறும் 4ஆவது தொகுதி சட்டவாளர்களின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு தமிழீழ நீதிமன்ற வளாகத்தில் - தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சிங்களப்பேரினவாதம் தமிழ் மக்களை அழித்தொழிப்பதற்கான திட்டங்களைத்தீட்டி, அதனைச் சட்டமாக வரையறை செய்யும்வேளையில் எமது தேசியத் தலைவரின் தீர்க்கதரிசனமான உயரிய சிந்தனையால் உருவாக்கப்பட்டதுதான் தமிழீழ நீதி நிர்வாகத்துறை.

எதிரி திட்டமிட்டு எமது மக்களை சமூக வாழ்க்கை முறையை சீரழிக்க முயன்றுவரும் தருணத்தில், இலங்கை சட்டத்துறை அதற்குத் துணைபோகும் வகையில் செயற்பட்டு வருகிறது.

குற்றச்செயல்கள், மோசடிகள் என்பன இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன. குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களைக காப்பாற்றி விடுவிக்கும்நிலை காணப்படுகிறது.

சர்வதேச மன்னிப்புச்சபை, மனிதஉரிமை ஆணைக்குழு, சர்வதேச ஊடகவியலாளர்கள் எனப்பலர், எமது நீதி நிர்வாகக் கட்டமைப்பை நேரில்வந்து பார்வையிட்டுப் பாராட்டி இருக்கின்றார்கள். இதனை எமது விடுதலைக்கான அங்கீகாரமாகவே நாம் பார்க்கின்றோம் என மேலும் தெரிவித்தார்.

# சுற்றுநிருபங்களுக்கு முரணானவகையில் நியமனம் வழங்குவது மனித உரிமைமீறல்

### பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபங்களுக்கு முரணானவகையில் நியமனங்களை வழங்குவது, பலகலைக்கழக ஊழியர்களின் அடிப்படை மனித உரிமையை மீறும்செயல் எனத்தெரிவித்து, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதிக்கிளையிலே குறித்த ஒரு பதவிக்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் அனுமதியின்றி ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இந்த விடயமானது சட்டத்திற்கு முரணானது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்களோ, கடிதங்களோ இந்த நியமனம்மூலம் பெறுமதியற்றனவாக மாறியுள்ளன. எனவே, இந்த விடயம் தொடர்பாக விசாரணைகள் செய்து, பல்கலைக்கழக ஊழியர்களின் மனித உரிமைகளை காக்கவேண்டுமென இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனத்தை கண்டித்து, பல்கலைக்கழக ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும் இந்தப் பதவிக்கு முன்னர் இருந்தவரின் ஒப்பந்தகாலம் நிறைவு பெறுவதற்கு முன்னரே புதிதாக ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த நியமனம் தனிப்பட்ட செல்வாக்கினால் வழங்கப்பட்டிருப்பதால், ஊழியர்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக் கழக ஊழியர்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ச)

# எனது மகனின் கொலை தொடர்பான உண்மை நிலையை அறியத்தரவும்

### மனித உரிமை ஆணைக்குழுவில் தந்தை முறைப்பாடு

கல்வயல் பகுதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட எனது மகனின் கொலைதொடர்பான உண்மையான விபரத்தை பெற்றுத்தரும்படி - கொல்லப்பட்ட இளைஞனின் தந்தை யாழ மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

கொழும்பிலிருந்து வான் ஒன்றின்மூலம் யாழ்ப்பாணத்திற்கு வந்துகொண்டிருந்த, புதிய செம்மணி வீதி நல்லூரைச் சேர்ந்த சு.வினோதன் (வயது-21) எனும் இளைஞர், சாவகச்சேரி கல்வயல் பகுதியில் வைத்து இரு வாரங்களுக்குமுன் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவரது கொலையுடன் தொடர்புடையவர்கள் யார் என இதுவரை கண்டறியப்படவில்லை. கொழும்பிலிருந்து இவருடன் கூடவந்ததாகக் கூறப்படும் மானிப்பாயைச் சேர்ந்த ரி.சூரியகுமார் என்பவர்மீதே தமக்கு சந்தேகமுள்ளதாக இளைஞரின் தந்தையாரான அ.சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். ஆனால், இவரும் இதுவரை எங்குள்ளார் என்பது கண்டறியப்படவில்லை.

இவருடன்கூட, பத்து கணினிகளையும் குறித்த இளைஞர் கொண்டுவந்ததாகவும், அந்தக் கணினிகளும் சம்மந்தப்பட்ட வாகனமும் என்னவானது என்பது தொடர்பாகவும் எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

எனவே, இந்த விடயம் தொடர்பாக நீதியான முறையில் விசாரணைகளை மேற்கொண்டு, தனது மகனின் கொலை தொடர்பான தகவலைப் பெற்றுத்தரவேண்டுமென தந்தையார் மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கோரியுள்ளார்.

ரி.சூரியகுமார் எனப்படும் நபர் தொடர்பாக விசாரித்தபோது, அவர் மானிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்தவர் அல்ல எனவும் கல்வயல் பகுதிக்கு தொடர்புடையவர் எனவும் அறியவந்துள்ளதாகவும் கொல்லப்பட்ட இளைஞனின் தந்தை தெரிவித்தார்.

இந்த கொலை தொடர்பாக கிளிநொச்சியில் தமிழீழ காவல் துறையினரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

(ச)

அரசியல் கட்டுரை

கனடாவிலிருந்து சுதர்மா



# தேரவாத பௌத்தமும் சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டும்

பௌத்த மதம் பரவியுள்ள தேசங்களில் - சமூக நடைமுறைக்கு ஏற்பவும், மக்களின் வாழ்வியலிற்குத் தகுந்த விதத்திலும் உருவகம் பெற்றுள்ளது. அந்த வகையில் சிங்கள தேசம் 'தேரவாத பௌத்தத்தை' தனது சன்மார்க்கமாகத் தேர்வுசெய்து பின்பற்றி வருகிறது.

ஆனால், சிறிலங்காவின் தேரவாத பௌத்தத்தின் தலைமைகள் - மதத் தலைமைகளாக மட்டுமல்லாது, சிங்களத்தின் அரசியல் கட்சிகளை வழிநடத்தும் சக்தியாகவும் இயங்கி வருகின்றன. இந்த வகையில் அவற்றின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அமைப்பாகவே புதிய அரசியற் கூட்டணி பரிமாற்றம் பெற்றுள்ளது.

இதற்கான சாட்சியமாக, கடந்த செவ்வாய்கிழமை இடம்பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் புரிந்துணர்வு ஒப்பந்தக் கைச்சாத்துகையை எடுத்து நோக்கலாம்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது - பௌத்த மதகுருமார், இந்துக் குருக்கள், முஸ்லிம் மௌலவிமார் ஆசிர்வாதங்களை வழங்கவென அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால், இந்த நிகழ்விற்குக் கிறிஸ்தவ மதகுருமார் அழைக்கப்படவில்லை. இதற்கான காரணம் - இனவாத பௌத்தம் பயணிக்கும் திசையிலேயே இந்த இரு கட்சிகளும் பயணிக்கின்றன என்பதே.

குறிப்பாக, 2003 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் இடம்பெற்ற ஒரு மரணத்தின் காரணமாக, இப்போது பௌத்தத்தின் பிரதான குறியாக, கிறிஸ்தவமதம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

மக்களை வசீகரிக்கக்கூடிய ஆற்றல் மற்றும் தான் எடுத்துக்கொண்ட விடயத்தைத் திறமையாகக் கையாளும் ஆளுமை ஆகியவற்றைப் பாவித்து, பௌத்த மதத்தினை தனது வளர்ச்சிக்கான விலைபொருளாக்கிய வண.கங்கொடவில சோமதேரோவின் மரணமே இதற்கான ஆரம்பப்புள்ளி.

ஏனெனில், சமீபகாலமாகக் கிறிஸ்தவ மதத்தைத் தாக்குவதையே தனது முதலாய கடமையாகக் கொண்டிருந்தவர் இந்தத் தேரர்.

பௌத்தம் பற்றிய தேரரின் நூலொன்றின் பெயரால் வழங்கப்பட்ட கௌரவக் கலாநிதிப் பட்டமொன்றைப் பெறுவதற்காக ரஷ்யாவிற்குச் சென்றிருந்தபோதே தேரர் மரண மடைந்தார்.

ஒக்ரோபர் 21 ஆம் திகதி ரஷ்யாவைச் சென்றடைந்த தேரர் - விமானத்திலேயே நெஞ்சு வலிக்குள்ளானதைத் தொடர்ந்து, அங்கு அவர் தொடர் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். ஏற்கனவே நீரிழிவுநோயால் பாதிக்கப்பட்ட தேரரிற்கு, திறந்த இருதய அறுவைச் சிகிச்சை செய்வதற்கான தேவை இருந்தும், அதற்கான உடலாரோக்கியத்தை அவர் கொண்டிராதநிலையில் கடந்த டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி இவ்வுலகை நீத்தார்.

எனினும், தேரரின் மரணத்தைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கிய சிங்களம், அவரது மரணத்தில் கிறிஸ்வத்தின் பங்கு நிறையவே இருப்பதாகத் தேவையற்ற சந்தேகத்தை உள் வாங்கியது.

இந்து சமயத்திலிருந்து பௌத்தத்திற்குப் பரம்பிய சில சமய அனுஸ்டானங்கள், இஸ் லாமியரின் கட்டுப்பாடற்ற குடும்பப் பெருக்கம், கிறிஸ்தவ மிசனரிகள் சிலவற்றின் மதப்பிர சாரம் ஆகியவற்றையே தனது முக்கிய தாக்குபொருளாகத் தேரர் கையாண்டு வந்தார்.

இதனால், ரஷ்யாவில் இடம்பெற்ற இவரின் மரணத்தின் பின்னால், கிறிஸ்தவத்தின் கையே இருப்பதாகப் பௌத்தம் நினைத்துக் கொண்டது. குறிப்பாக, கடந்த சில மாதங்களில் மாத்திரம் சுமார் 107 கத்தோலிக்க தேவாலயங்கள் இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன.

குறிப்பாக, கடந்த மூன்று வாரங்களில் சுமார் 49 கத்தோலிக்கத் தேவாலயங்கள் தாக்குதலிற்கு உள்ளாகியுள்ளன. புரட்டஸ்தாந்துப் பிரிவுத் தேவாலயங்கள் பற்றிய விபரங்கள் இன்னமும் வெளிவரவில்லை.

இதுதவிர, தேவாலயங்களின் பங்குத் தந்தைமார் மற்றும் கிறிஸ்தவர்கள் தாக்குதலுக்கும், மிரட்டல்களுக்கும் உள்ளாகியுள்ளனர். தென்னிலங்கையைச் சேர்ந்த இவர்கள் மத ரீதியாக வேறுபட்டிருந்தாலும், இனரீதியாகச் சிங்களவர்கள் என்பதையும் மறந்தே இத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.

இந்தப் பரந்துபட்ட கிறிஸ்தவ எதிர்ப்புணர்வை உள்வாங்கியதொரு சக்தியாகவே, தாம் விளங்குவதை அடையாளப்படுத்தவே ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியினரால் - கிறிஸ்தவ குருமார் தவிர்க்கப்பட்ட நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

எனவே, இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 7.3 விழுக்காடுள்ள கிறிஸ்தவ மதத்தினரைக் கருத்திற்கொள்ளாது, பௌத்தத்திற்குத் தலைசாய்ப்பதான போக்கினடிப்படையில் இந்த நிகழ்வை நாம் எடுத்து நோக்கவேண்டும். இதற்கான காரணம் யாதெனில் - பௌத்தபீடங்களின் விருப்பத்தின் வெளிப்பாடே இந்த முன்னணியின் உருவாக்கமாகும்.

இதனை நாம் சம்பவ சாட்சியங்களின் மூலம் தெளிவாக உணரமுடியும். குறிப்பாக, 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமனறத் தேர்தலில், பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிபீடம் ஏறுவதற்கான துணையாக அது சிறுபான்மைக் கட்சிகளையே பெரிதும் நம்பியிருந்தது.

முஸ்லிம் காங்கிரஸ், தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் ஆதரவுடனேயே தனது ஆட்சியைத் தக்க வைத்திருந்தது. எனினும், ஆட்சிக்கு ஆதரவாக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறிய போது, பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சி ஈடாட்டம் கண்டது.

இந்த நிலையில், சுமார் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஜே.வி.பி.-தான் வெளியிலிருந்தபடி ஆட்சியை ஆதரிப்பதாக அறிவித்து, நாடாளுமன்ற அரசு மீண்டும் உயிர்பெறுவதற்கு வழிவகுத்தது.

இருந்த போதும், தொழிலாளர் காங்கிரஸ்ம் கூட்டணியிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டதையடுத்து, இந்த ஆட்சி முடிவிற்கு வந்தது. இந்த நிகழ்வானது, சிங்களத்தின் ஆட்சியைத் தீர்மானிக்கும் இன்றியமையாத சக்திகளாக சிறுபான்மைக் கட்சிகளே அமைந்திருப்பது தேரவாத பௌத்தத்தின் நான்கு பீடங்களாலும் கவனத்திலெடுக்கப்பட் டுள்ளது.

எனவே, பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியை தக்கவைப்பதற்கான ஆதரவை வழங்குவது என்ற ஜே.வி.பியின் முடிவை வரவேற்ற அஸ்கிரிய, மல்வத்தை, அமரபுர, ராவண்ண பௌத்தபீடங்களின் மகாநாயக்கர்கள் - இந்த ஒருமித்த செயற்பாட்டை இருகட்சிகளும், தொடர்ந்தும் தங்களுக்குள் ஒரு இணக்கப்பாட்டிற்கு வரவேண்டுமெனவும், எதிர்காலத்தில் சிறுபான்மைக் கட்சிகளை நம்பியிராது, சிங்களக் கட்சிகள் தங்களுக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள முன்வரவேண்டுமெனவும் பகிரங்க வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஒன்றிற்கு ஒன்று மாறுபாடுடையவையாக இருந்தாலும், இந்த நான்கு பௌத்தபீடங்களும் சிங்கள தேசியத்தின் பால் அசையாத பற்றுறுதி கொண்டவை. சிங்களத்தின் தேவை கருதி ஒருமித்துப் பயணிப்பவை. அவ்வாறே இவற்றின் வேண்டுகோள்களுக்கான கனதியுமாகும்.

எனவேதான், 2001 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் - பௌத்த தலைமைகளால் முன்வைக்கப்பட்ட இந்த விருப்பு, இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தக் கூட்டணியானது, தனது ஆட்சிக்கான வழியாக பௌத்தத்தின் ஆதாரமான பஞ்சசீலங்களை உதாரணப் படுத்தியுள்ளது - இதனையே எடுத்துக் காட்டுகிறது.

இன்னொருபுறமாக, சிறிலங்காவின் பிரதமர் ரணிலின் கூற்றும் இதனையே நிரூபித்து நிற்கிறது. இரு கட்சிகளும் மற்றையவர்களை ஏமாற்றுவதற்காகவே புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தின எனவும், அவை ஏற்கனவே எட்டப்பட்ட ரகசிய உடன்பாட்டின் கீழேயே இயங்கின்றன எனவும் தெரிவித்துள்ளதோடு, இந்த இரகசிய உடன்படிக்கையை மக்களின் பார்வைக்கு கொண்டுவருமாறு, ரணில் - புதிய கூட்டணிக்குச் சவால் விடுத்துள்ளார்.

இனவாத பௌத்தத்தின் ஒட்டுமொத்த வடிவமே இந்தக் கூட்டணி என்பதற்கான சான்றாக ரணிலின் கருத்து வெளியீட்டை நாம் நோக்கலாம்.

அத்தோடு, புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிநாதமாக அமைந்துள்ள, 'இன மற்றும் மத அடிப்படையிலான பிரிவினைகளைத் தடுப்பதோடு, பௌத்த தேசத்தின் இறையாண்மை, சுதந்திரம் என்பவற்றிற்குக் குந்தகம் ஏற்படாமல் பாதுகாப்போம்' என்ற கொள்கையில், மதம் சார்ந்த முதற்பலியாக கிறிஸ்தவ மதம் இடம்பெற்றாலும், இனம் சார்ந்த பலியாக தமிழினமே குறிபார்க்கப் பட்டு வருகிறது என்பதை, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அநேக சரத்துக்கள் தெட்டத்தெளிவாகக் கோடிட்டுக் காட்டியுள்ளன. குறிப்பாகப் போரொன்றிற்கான அறிவிப்பை அவை ஏற்கனவே வெளியிட்டுள்ளன.

இம்முறை பௌத்தபிக்குக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல அமைப்புக்கள் நேரடியாகவே ஜே.வி.பியுடன் இணைந்து, களத்தில் இறங்கியிருக்கின்றன. எவ்வாறு ஒரு தனிமனிதரான கங்கொடவில சோமதேரோவின் மரணம் - ஒரு மதத்திற்கெதிரான போரை தென்னிலங்கையில் உருவகப்படுத்துகிறதோ, அதேபோன்று தமிழினத்தின் அழிப்பிற்கான போரில் ஏற்கனவே தேரர்களின் பங்கு இடம் பெற்றிருக்கிறது. குறிப்பாக சுமார் 6 பிக்குக்கள் இதுவரை இராணுவத்தில் இணைந்துள்ளனர் என்பதோடு, காலத்திற்கு காலம் சிங்களத்தின் போரியலிற்கான ஆதாரமாகப் பல பிக்குக்கள் வந்து போயுள்ளனர்.

குறிப்பாக, வெலிஓயா தேரோ என அழைக்கப்பட்ட வண.சோமபால தேரர் - இராணுவத்தின் தோல்விகளின் போதெல்லாம் துடித்தெழுகிற வண.கலபொட ஞானசார தேரர், வண.மடுலுவவே சோபித தேரர், வண. எல குணவன்ச தேரர் மற்றும் இனவாத போதையேற்றுகின்ற வண.அதுராலிய ரதானா தேரர், வண.தெபுவன பியந்த தேரர், வண.மடிகி பின்னாசிக மகா நாயக்க தேரர் போன்ற பலரைத் தமிழர்கள் ஏற்கனவே கண்டாயிற்று. இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றை பௌத்தம் அனுமதிக்கப்போவதில்லை என்பதற்கான சாட்சியங்களே இவர்கள்.

ஆனால், எம்முன் தற்போதுள்ள கேள்வி இவர்களையோ, பௌத்தத்தையோ பற்றியதல்ல. இனவாதச் சகதியில் மூழ்கியுள்ள சந்திரிகா - ஜே.வி.பி கூட்டணி ஆரம்பிக்க விரும்பும் போரை, சர்வதேசம் எவ்வாறு உள்வாங்கும் என்பதேயாகும்.

சந்திப்புக்களம்

காவலூர் விஜேந்திரன்

# கலைக்காக வாழ்வை சமர்ப்பிப்போரை சமூகம் மதிக்கப் பழகவேண்டும்



இசை நாடகத்துறையில் தனக்கென 40 வருடங்களாகத் தனியான பாணியைப் பேணிவரும் அரியாலையூர் வடிவேலு செல்வரெட்ணம் அவர்களைச் சந்தித்தோம். தனது இசை நாடகப் பிரவேசம், அதனூடாகத் தான்பெற்ற அனுபவங்களை மிகநேர்த்தியான முறையில் பகிர்ந்துகொண்டார்.

நீங்கள் நாடகத்துறையில் உள் நுழைந்தமை பற்றிக் கூறமுடியுமா?

ஆம் பாடசாலையில் இடம்பெறும் சிறு நிகழ்வுகளில் பங்குகொண்டேன். உழவர் என்ற சமூக நாடகத்தில், பெண் பாத்திரமேற்று நடித்தேன். இது பெருவரவேற்பைப் பெற்றது. தொடர்ந்து கலைமகள் நாடக சபாவில் இணைந்து, பெண் பாத்திரங்களில் நடித்தேன். இதில் பிரபல நடிகர் சந்திரமதி இரத்தினத்துடன் முன் பாத்திரங்களிலும், அவருக்குத் தோழியாகவும் நடித்தேன். இவ்வாறு ஆரம்பமான எனது கலைப்பணி - இன்று பல கலைஞர்களுடன், அவர்களுக்கு இணையாக, முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகிறேன் என்றார்.

நடிகையாகப் பல பாத்திரங்களை ஏற்று செய்து வருவதற்கு எனக்கிருக்கும் இனிமையான குரலுடன், யதார்த்தமான அசைவுகளுமே காரணமாகும். ஒரு பெண்ணாக மாறிய பின்பே மேடையில் ஏறுவேன். உருத்திரபுரத்தில் வி.என. செல்வராஜனுடன் கோவலன்-கண்ணகி நாடகத்தில் கண்ணகியாக நடித்தேன். இதில் சுவையான கண்ணகியாக வேடமேற்று மேடையின் பின்புறம் இருந்தேன். இரு பெண்கள் வந்து அக்கா, அக்கா என இனிமையாக உரையாடினார்கள். நானும் காட்டிக்கொடுக்காமல் இருந்துவிட்டேன். பொதுவாகப் பல இடங்களில் நாடகம் முடிந்தவுடன் மேடையில் பெருமளவானோர் என்னை யாரென்று அறிவதற்கு கூடுவார்கள் .

V.V.வைரமுத்து பற்றிக் கூறுவதானால், மேடையில் பாத்திரமாகவே மாறிவிடுவார். அவரது பேச்சும், அங்க அசைவுகளும் உணர்வுபூர்வமாக இருக்கும். முகபாவம் அவருக்கே தனியான சிறப்புமிக்க நடிப்பை கொண்டு வருவதற்கு, இன்றைய கலைஞர்கள் வசனத்தை பேசிமுடித்தால் சரி என்று நடிக்கிறார்கள். பாத்திரத் தன்மையைக் கவனத்தில் கொள்வதில்லை. V.V. போன்ற திறமையான நடிகர் ஒருவரை நான் இதுவரை மேடையில் சந்திக்கவில்லை. எனக்கு நடிககலாமணி என்ற கௌரவப் பட்டம் வழங்கப்பட்டமை. கிருஸ்ணர் ஆழ்வார் அரங்கில் நடைபெற்ற நாடகத்தை இடையில் நிறுத்தியே இவ்விருது வழங்கப்பட்டது. இது எதிர்பாராமல் எனக்கு கிடைத்தது.

கம்பவாரி இ.ஜெயராஜ் எமது நாடகத்தைப் பார்த்துவிட்டு, எம்மை அணுகி, கம்பன் கழகத்தில் நாடகம் போடும்படி கேட்டுக்கொண்டார். இந்த நிகழ்வில் தங்கம்மா அப்பாக்குட்டியினால் எனக்குப் பெரு கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இது என்னால் மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும்.

முழுமையான கலைஞர் என்ற வகையில், நடிப்பு பற்றிக் கூறுவதானால் - கலைஞனின் குரல், அதனை உச்சரிக்கும்முறை, முகபாவம், அங்க அசைவுகள் பாத்திர மாற்றம் பார்வையாளரைக் கவரும் முறையான அலங்காரம் இவற்றுடன் பாத்திரமாக மாறி உணர்வு பூர்வமாக பாத்திரத்தை வெளிப்படுத்த வேண்டும். பயபக்தி குரு விசுவாசம் இவற்றுடன் சக நடிகரையும் கலையையும் மதிக்கவேணடும்.

கலைஞர்கள் நேரத்தை சரியாக மதிப்பளித்துக்கொள்ள வேண்டும். உரியநேரத்திற்கு சமூகமளிப்பதுடன் பார்வையாளர்கள் குறைவாக இருந்தாலும் குறைவு எனக் கருதாமல் எமக்குரியதை சரியாக செய்யவேண்டும். சக நடிகரைப் புரிந்துகொண்டு அவருடன் ஒத்துப் போகக்கூடிய வகையில் நடிப்பைப் பொறுத்தவகையில் அது ஒரு கூட்டுமுயற்சி என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும்.

திரைப்பட அனுபவம் பற்றிக் கேட்டபோது, நிர்மலா என்ற இலங்கைத் தமிழ் திரைப்படத்தில் ஒரு காட்சிக்குள் அரிச்சந்திரா மயான காண்டம் படமாக்கப்பட்டது எனக் குறிப்பிட்டார்.

இசைநாடகத்தின் இன்றைய நிலை பற்றிக்கூறுவீர்களா? என வினாவியதற்கு முன்பு இதற்கு இருந்த மரியாதையும் மதிப்பும் இன்று குறைவாக உள்ளது. இதற்கு பல காரணங்கள் உள்ளன என்றார்.

கலைக்கு உயிர்கொடுத்த பல இளம்கலைஞர்களை வளர்த்துக் கொண்டிருக்கும் செல்லையா மெற்றாஸ்மயில் போன்றவர்களது பணி வரவேற்கத்தக்கது. இவ்வாறான கலை ஆர்வம் கொண்டவர்கள் முன்வந்து தளர்ந்திருக்கும் இசை நாடகத்துறையை வளர்க்கவேண்டும்.

இளம் சமூகம் பூரண ஒத்துழைப்புடன் தம்மாலான உதவிகளையும் வழங்குவதுடன், நாடகத் துறையிலும் இணைந்து கொள்ளவேண் டும். இவ்வாறு பல கருத்துக்களை அனுபவரீதியாக முன்வைத்தார். கலைஞரான கேசரி சந்திரமதி புகழ் செல்வரட்ணம் அவர்களுடனான செவவியை நிறைவுசெய்யும் முகமாக இறுதியாக இத்துறை சார்பாக கூறவிரும்புவது - கலைஞர்களுக்கு ஆர்வம் இருக்கவேண்டும். பொறுப்புடன் செயற்பட்டு, கலைக்காகத் தமது வாழ்வைச் சமர்ப்பித்துச் செயற்படுபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்என்றார்.

## காரணம் அறியும் முன்

# ஒரு மாதத்தில் ஐந்து ஹெலிகளை இழந்துநிற்கும் அமெரிக்க வான்படை

## ஈராக்கில் தொடரும் மர்மம்



(பாக்தாத்)

அமெரிக்க வான்படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று பாக்தாத்தின் திக்றிட் ஆற்றில் நேற்று முன்தினம்வீழ்ந்து நொருங்கியது. அதில் பயணஞ்செய்த இரு விமானிகளையும் தேடும் பணி தொடர்வதாகவும் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தலைநகர் பாக்தாத்தின் வடக்கு நகரில் அமைந்துள்ள திக்றிட் ஆற்றில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த படகுஒன்றிலிருந்து காணாமற்போன அமெரிக்கப் போர்வீரர் ஒருவரைத் தேடும்பணியில் ஈடுபட்டிருந்தபோதே, ஹெலிகொப்டர் ஆற்றில் வீழ்ந்து நொருங்கியது.

மூழ்கிய படகில் பிரயாணம்செய்த இரு ஈராக்கியப் பொலிஸார் உட்பட மொழிபெயர்ப்பாளர் மற்றும் அமெரிக்கப்போர்வீரர் ஒருவரும் மரணமடைந்தனர். இந்தச்சம்பவத்தில் மூவர் காப்பாற்றப்பட்டனர். காணாமற்போன போர் வீரரின் நிலையை அறிந்துகொள்வதற்காகவே தேடுதல் பணியைக் ஹெலிகொப்டர் மேற்கொண்டிருந்தது.

இந்தக் ஹெலிகொப்டர் விபத்துடன் சேர்த்து இந்தமாதத்தில் அமெரிக்கா ஐந்தாவது ஹெலிகொப்டரை இழந்துள்ளது. இந்தமாதம் மொசுலில் நான்காவது ஹெலிகொப்டர் வீழ்ந்தமைக்கான காரணமும் இன்னமும் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஐப்பானியப்படை ஈராக் சென்றுள்ளது

(பாக்தாத்)

ஜப்பானிய பிரதமர் யூனிசிறோ கொய்சுமி சமாதானப் பணிகளுக்குப் போர்வீரர்களை ஈராக்கிற்கு அனுப்புவதற்கான அங்கீகாரத்தை தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெற்றுள்ளார்.

இதன்மூலம், 600 ஜப்பானியப் படைவீரர்கள் ஈராக்கிற்கு அனுப்பிவைக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது உலகப்போரின் பின்னர் போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பிரதேசத்திற்கு முதல்தடவையாக படையினர் அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஈராக்கின் நிலைமையை அறிந்துகொள்வதற்காக, ஜப்பானியப் படையைச் சேர்ந்த ஒரு தொகுதியினர் ஈராக்கிற்குச் சென்றுள்ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதமளவில் 1000 பேர் வரையான ஜப்பானியப் படையினர் ஈராக்கில் கடமையில் ஈடுபடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர்களின் முக்கிய பணிகள் நீர்விநியோகத்தைச் சீர்செய்தல் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குதல் என்பனவாகும். ஆனால், தாக்குதல் ஒன்று இப்படையினர்மீது நிகழ்த்தப்படும்போது எதிர்த்தாக்குதல் நிகழ்த்துவதற்கு இவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் பணிபுரியும் ஜப்பானியப் படையினரின் பாவனைக்கென நகர்த்தக்கூடிய வீடுகளை எடுத்துச்சென்றவேளை ஜோர்தான், பாக்தாத் ஆகிய நகரங்களுக்கான பெருந்தெருவல் இடம்பெற்ற தாக்குதலின்போது ஜோர்தானிய கார்ச்சாரதி கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதலின் எதிரொலியாக ஜப்பானியப் படையினரை ஈராக்கில் பணிபுரிவதற்கென அனுப்பியதற்கு பல ஆயிரக்கணக்கான ஜப்பானிய எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தமது எதிர்ப்பினைத் தெரிவித்து ஊர்வலங்களை ஜப்பானில் நடத்தியிருந்தனர்.

ஆனால, சர்வதேச சமூகத்திற்கு பணிபுரிவதற்கு ஜப்பான் தனது பங்களிப்பைச் செலுத்துவது முக்கியமானதென ஜப்பானியப் பிரதமர் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

மேலும் உலகின் சமாதானத்திற்கு ஜப்பானின் புனர்நிர்மாணம் அவசியமானதெனவும் இதனால் உதவிசெய்யவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



உலக நோக்கு

## இந்தியாவின் குடியரசுதின காட்சிகளிலிருந்து...



# அசம்பாவிதங்கள் இன்றி நடைபெற்ற இந்திய குடியரசுதின கொண்டாட்டம்!

இந்தியாவின் 55 ஆவது குடியரசுதினம் நேற்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் மூவர்ணக் கொடியை ஏற்றிவைத்து முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பிரதமர் வாஜ்பாய் காலை - இந்தியா கேட்டில் உள்ள அமர்ஜவான் ஜோதிக்குச்சென்று வீரமரணம் அடைந்த இராணுவ வீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தினார். அங்கு இரண்டுநிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

பின்னர், அவர் அணிவகுப்பு நடைபெற்ற ராஜ்காட்டிற்குச் சென்றார். இந்திய தேசிய சின்னமான சாரநாத் ஸ்தூபி உள்ள இடத்திற்கு நேர்எதிரே அமர்ந்தார். குடியரசுத் தலைவர் அபதுல் கலாம் 46 குதிரை வீரர்கள் முன்னே அணிவகுத்துச்செல்ல அரசமரியாதைகளுடன் அழைத்துவரப்பட்டார்.

இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக வருகைதந்திருந்த பிரேசில் நாட்டு அதிபர் லூயிஸ் இனாகியோ லூடா சில்வா அவருடன் வந்திருந்தார். பின்னர், 21 குண்டுகள் தீர்க்கப்பட கலாம் தேசியக் கொடியை ஏற்றினார். இதனையடுத்து 4 ஹெலிகொப்டர்கள் குடியரசுத் தலைவர் மாளிகைப்பக்கமிருந்து மலர்களைத்தூவியபடி இந்தியா கேட் நோக்கிப்பறந்தன.

இதைத்தொடர்ந்து மேஜர் ஜெனரல் தோமஸ் மத்யூ தலைமையில் இராணுவ அணி வகுப்பு நடைபெற்றது. அப்போது பரம்வீர் சக்ரா, வீர் சக்ரா, அசோக் சக்ரா விருதுபெற்ற வீரர்கள், கலாமுக்கு வீரவணக்கம் செலுத்தினர். அணிவகுப்பில் இராணுவத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள அக்னி- 2 ரக ஏவுகணைகள், டி-90 ரக பீஷ்மா டாங்கிகள், எல்.ஏ.எச். இலகுரக ஹெலிகொப்டர்கள், விமானியில்லாமல் பறககும் டுரோன் ரக விமானங்கள் ஆகியவை இடம்பெற்றன.

பின்னர், இந்தியாவின் பரந்துபட்ட கலாசாரப் பெருமைகளைப் பறைசாற்றும்வகையில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த கலாசாரக் குழுக்கள் அணிவகுத்துச் சென்றன.

தமிழகம் உட்பட நாடுமுழுவதும் குடியரசு தினம் மிகவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. சென்னையில் ஆளுநர் ராம்மனோகர் ராவ் தேசியக்கொடியை ஏற்றிவைத்து முப்படைகள் மற்றும் காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். நிக வில் முதல்வர் ஜெயலலிதா மற்றும் அமைச்சர்கள் பங்கேற்றனர்.

## ஊர்சுற்றி எழுதுவது

ஜே.வி.பி என்ற மக்கள் முன்னணிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கப்பாட்டு உடன்பாடு நீடிக்குமா, நிரந்தரமாக இருக்குமா என்ற கேள்வி அரசியல் வட்டாரங்களில் பலமாக அடிபடுகிறது.

இந்த உடன்படிக்கை கைச்சாத்தியப்பட்டதுமே சுதந்திரக்கட்சியின் தலைவியான சந்திரிகா அம்மையார் தமது கட்சிக்காரர்களைப் பார்த்து வேதனையுடன் தமது கொதிப்பை வெளிப்படுத்தியதாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

இதே வயிற்றெரிச்சலை அம்மையாரின் தம்பியாரும் வெளிப்படுத்திருந்தாராம்.

ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி உடனபாட்டுப் பேச்சுவார்த்தைகள் நடைபெறத்தொடங்கிய காலத்திலிருந்து இடைக்கிடை சோர்வும், தளர்வும் ஏற்பட்ட சமயங்கலெல்லாம் அக்காவையும் மற்றவர்களையும் உஷார்படுத்திப் பேச்சுவார்த்தை தொடர்வதற்கு இந்தத் தம்பிதான் முழுமூச்சாகப் பாடுபட்டாரம்.

பாவம் ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி உடன்பாடு கையொப்பமிட்ட சமயம் இவரை யாருமே கவனத்திற்கு எடுக்கவில்லையாம்!

தேர்தல் சீர்திருத்தத்துக்கான தெரிவுக்குழுவுடன் இடைக்கால அறிக்கையில் கையொப்பமிடுவதற்கு ஜே.வி.பி மறுத்துவிட்டதாம். இந்தத தெரிவுக்குழுவுக்கு மகாஜன எக்ஷத் பெரமுன முன் (மக்கள் ஐக்கிய முன்னணி)தனேஷ் குணவர்த்தன தலைவராக இருப்பது தெரிந்ததே!

இன்னொரு பிரச்சினை என்னவென்றால் ஜே.வி.பியுடன் சுதந்திரக்கட்சி இணைந்து செயல்பட உடன்பாடு செய்துள்ளது. இதே சமயம் சுதந்திரக்கட்சியுடன் வேறு பல கட்சிகள் சேர்ந்துதான் பொதுஜன ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது. பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்துள்ள கட்சிகள் அதிகார பரவலாக்கலை ஆதரிக்கின்றன. ஆதரித்தது மட்டுமல்ல அதிகாரப்பரவலாக்கல்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகுமென்றும் கூறியிருக்கின்றன.

இதேசமயம், ஜே.வி.பியினர் அதிகாரப் பரவலாக்கலை ஆதரிக்காதது மட்டுமல்ல எதிர்த்தும் வருகின்றன.

போர்நிறுத்த உடன்படிக்கை சம்பந்தமாக சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி.பிக்குமிடையில் கருத்துவேறுபாடுகள் இருக்கின்றன.

சமஷடி ஆட்சி அமைப்பின் மூலமே இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியுமென்பது ஐம்பதாண்டுகளுக்கு பின்னர் - சிறிலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கியதேசியக்கட்சியும் ஏற்றுக்கொண்டுள்ளன இந்தச்சமயத்திலும் ஜே.வி.பி சமஷ்டி ஆட்சி அமைப்பை எதிர்த்து நிற்கிறது.

இதன் பின்னணியில் இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஜே.வி.பி - சுதந்திரக் கட்சி எந்தளவுக்கு உதவமுடியும்?

ரணில் அரசாங்கத்துடன் முறுகல் நிலையைப் பின்பற்றிவந்த ஜனாதிபதி சந்திரிகா அந்த நிலையிலிருந்து மாறிக்கொஞ்சம் மென்போக்கைப் பின்பறறத் தொடங்கிருப்பதாக கூறப்படுகிறது. இதேசமயம் -விடுதலைப் புலிகள் மீதும் அபிமானம் தெரிவிப்பதாகவும் சில வட்டாரங்ளில் பேசிக் கொள்ளப்படுகிறது.

இந்தநிலை நிரந்திரமானதா, நீடிக்கக்கூடியதா?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அத்துருகிரிய தேடுதலுடன் தொடர்புடைய ரணில், ஜோன் அமரதுங்கவுக்கும் கடும் தண்டனை விதிக்க வேண்டும்!

## தேசப்பற்று தேசிய முன்னணி கோரிக்கை

(கொழும்பு)

அத்துருகிரிய மில்லேனியம் சிற்றியில் இராணுவ விசேட படைப் பிரிவின் மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதலுக்கு உத்தரவிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், அப்போதைய உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவையும் தண்டனைக்குட்படுத்த வேண்டும் என்று தேசப்பற்று தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

அத்துருகிரிய மறைவிடத்தில் தேடுதல் நடத்தப்பட்ட சம்பவத்துக்கு ஒத்துழைப்புக் கொடுத்ததாக-ஜனாதிபதி ஆணைக்குழுவினரால் குற்றம் சுமத்தப்பட்டிருந்த மேஜர் ஜெனரல் ஐவன் தசநாயக்கவை மார்ச் 31 ஆம் திகதியுடன் கட்டாயமாக ஓய்வு பெற்றுச்செல்லவும், மேலும் இரு சிரேஷ்ட அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்யவும் இராணுவத்தளபதி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள தேசப்பற்று தேசிய முன்னணி -

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் இந்தச் சம்பவத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், முன்னாள் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கும் தொடர்பிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இப்போது, இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்த ஒழுங்கு நடவடிக்கை மிகவும் தாமதமானது என்றும், உடனடியாக பிரதமர், முன்னாள் உள்துறை அமைச்சர் ஆகியோருக்கு கடும்தண்டனை வழங்கபட வேண்டும்.

இவர்கள் இருவரும் இந்தக் குற்றச்செயலுடன் நேரடியாகத் தொடர்பிருப்பதாகவும் தேசப்பற்று தேசிய முன்னணி மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அத்துருகிரிய...

பொலிஸ் அத்தியட்சகர் உடுகம்பொல தமது சொந்தக் காரணங்களுக்காக இந்தத் தேடுதலை நடத்தியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதேவேளை, இந்தத் தேடுதலுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகள் மூவருக்கு கட்டாய ஓய்வு வழங்க உத்தரவிடப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# புதுக்குடியிருப்பு விபத்தில் காரைநகர்வாசி மரணம்!

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வீதியில் நேற்று முன்தினம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற விபத்து ஒன்றில் காரைநகரைச் சேர்ந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை ஆறு மணிக்கு முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வீதியில் கைவேலிப் பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்து காரைநகர் தோப்புக்காட்டிலிருந்து இடம்பெயர்ந்து புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரத்தில் வசித்து வந்த வீரசிங்கம் சுரேஷ்நாதன் (வயது-30) என்பவரே உயிரிழந்தார்.

சைக்கிளொன்றில் சென்று கொண்டிருந்த இவரை மோட்டார் சைக்கிள் மோதியதனாலேயே இவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் படுகாயமடைந்து புதுக்குடியிருப்பில் உள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கொழும்பு பத்திரிகை நிருபரை டிசம்பர் முதல் காணவில்லையாம்!

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றில் நிருபராகப்பணியாற்றியவரைக் டிசெம்பர் மாதம் முதல் காணவில்லை எனத் தெரிவித்து - யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அவரது பெறறோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

துரைசிங்கம் விஜயபாஸ்கரன் (வயது-27) என்பவரே காணாமற்போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருதங்கேணி ஆழியவளை, தாழையடியைச் சேர்ந்த இவர், கடந்த ஒரு வருடகாலமாக பத்திரிகையின் அலுவலக நிருபராக கடமையாற்றி வந்தபோதிலும், கடந்த மாதம் 20ஆம திகதிக்கு பின் வீட்டாருடன் எதுவித தொடர்பும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. இதனால், குறிப்பிட்ட பத்திரிகையுடன் பெறறோர் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் சம்பளம் போதாமையால் வேலையிலிருந்து விலகுவதாக தமக்கு கடிதம் தந்து விட்டு நின்றுவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

எனவே, தமது மகனைத் தேடிக் கண்டுபிடிதது ஒப்படைக்குமாறு பெற்றோர் யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

### ஜனாதிபதி பதவிக்கால...

இந்த மனுவில் சட்டமா அதிபர் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்தார்.

1994 ஆம் ஆண்டுக்குப்பின்னர் இரண்டு தவணைகளுடைய பதவிக்காலங்களுக்காக ஜனாதிபதி மூன்று தடவைகள் பதவிப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார் என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பல கருத்துக்கள் நிலவுவதால், இது தொடர்பான சட்டரீதியான விளக்கத்தை அளிக்குமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் எப்போது வரை செல்லுபடியாகும் என்று நிர்ணயிக்கப்படவேண்டும் என்று மனுவில் கோரப்பட்டிருந்தது. இந்த மனுவையே பிரதம நீதியரசர் நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### புதிதாக உருவான...

வும், அதன் காரணமாக அடிப்படைப் பிரச்சினைகள் எழுவதுடன் நிச்சயமற்ற தன்மை தோன்றிவருகின்றது.

இந்தநிலை உகந்ததல்ல. சமாதானச் செயற்பாடுகள் குறித்து எதிர்காலத்தில் நோர்வே அரசுக்குப் பாரிய பங்களிப்பு இருப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளபோதிலும், கூட்டமைப்பை ஏற்படுத்திக்கொண்ட இருகட்சிகளுக்கும் இடையிலான ஆவணங்களில் நோர்வேயின் பங்களிப்புக்கு பலத்த விமர்சனங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, சமாதான முயற்சிகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறும்.

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொளளும் கூட்டம் பெப்ரவரி மாதம் நடைபெறுவதற்குமுன் இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறும் என்று அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

### கத்தரின் கிரிவ் இன்று கொழும்பு வருகிறார்

பொதுநலவாய அமைப்பின் தெற்காசியப் பிரிவின் இலங்கை விவகாரங்களுக்குப் பொறுப்பாக அண்மையில் நியமிக்கப்பட்ட செல்வி. கததரின் கிரிவ் இன்று கொழும்பு வருகின்றார்.

இவருடன், இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் ஸ்டிபன் ஈவான்ஸ் உடன்வரவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது, இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனை இன்று காலை அவரது அலுவலகத்தில் சந்தித்து இலங்கையின் இனறைய அரசியல் விவகார நிலைமைகள் பற்றி அறிந்து கொள்ளவுள்ளனர்.

இந்தச்சந்திப்பை தொடர்ந்து ஊடகவியலாளர் மாநாடும் நடைபெறவுள்ளது.

### சடலங்களைப் பொறுப்பேற்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவேளை, அங்கு மரணமாகி உரிமை கோரப்படாத நிலையில் உள்ள இரு சடலங்களையும் உறவினர்கள் இருப்பின் வைத்தியசாலை பொலிஸ் பிரிவுடன் தொடர்பு கொண்டு, உடனடியாகச் சடலங்களை பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸ்பிரிவு பொறுப்பதிகாரி பி.எச். லால் தெரிவித்தார். (111)

### வெள்ளைப்...

இவரது சடலம் மரண விசாரணைகளின் பின்னர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (121)

# கப்பூதூர் இராணுவ வாகன விபத்து சிப்பாய் பிணையில் விடுதலை!

(வடமராட்சி)

பருத்தித்துறை - சரசாலை வீதியின் கப்புதூ - அந்தணந்திடல் பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தையடுத்து, கைது செய்யப்பட்டிருந்த இராணுவச்சிப்பாயை பிணையில் செல்ல பருத்தித்துறை நீதமன்று நேற்று அனுமதித்துள்ளது.

இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியான தகுதிவாய்ந்த இருபடை அதிகாரிகளது ஆட்பிணையில் சந்தேகநபரை, பிணையில் விடுவிக்க பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் நேற்று அனுமதித்திருந்தார்.

இந்தமாத முற்பகுதியில் இடம்பெற்ற இந்தவிபத்தில், இராணுவ டிரக் வண்டியால் மோதப்பட்டு கரவெட்டி - நெல்லியடியைச் சேர்ந்த, தச்சுத்தொழிலாளியான சின்னத்துரை மனோகரன் என்பவர் உயிரிழந்தார். எனினும், விபத்திற்குள்ளான இராணுவ டிரக்வண்டியின் சாரதி அப்போது தப்பித்துச் சென்றிருந்தார்.

இந்தநிலையில், இவர் பின்னர் வரணியில் நிலைகொண்டுள்ள 52 ஆவது இராணுவ படைப்பிரிவை சேர்ந்த இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் அப்போது ஆஜர் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202)

### விறகு வெட்டச்...

நால்வர் மயிரிழையில் தப்பித்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - குறித்த ஐவரும் துவிச்சக்கர வண்டிகளில் அந்தப் பகுதியிலுள்ள கண்டல் காட்டுப்பகுதிக்கு விறகு வெட்டச் சென்றனர். வெட்டிய விறகுகளுடன் இவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளையிலேயே, இந்தக் குண்டுவெடிப்பில் சிக்கியுள் ளதாக தெரியவருகிறது. (202)

### ஆசிய பாதுகாப்பு மாநாட்டில்...

இன்று முதல் எதிர்வரும் வியாழக் கிழமை வரை, புதுடெல்கியில் நடைபெற ஏற்பாடாகியுள்ள இந்த மாநாட்டுக்கே முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமருக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டசின் அழைப்பின் பேரில் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் புதுடெல்கியில் வைத்து பெர்னாண்டசைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இந்தப் பாதுகாப்பு மாநாட்டில், ஐ.நாவின் பிரதிச் செயலாளர் நாயகம் லூயிஸ் பிரெசின், முன்னாள் அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் கார்மல் இன்ரபேர்த், ஐரோப்பிய யூனியனின் செயலாளர் நாயகம் ஜாவியர் சொலோனா மற்றும்,

முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் கே.எஸ்.டிக்ஸிற், ஐ.நாவின் அடிநிலைச் செயலாளர் ஷகி தடூர், பீஜில்லில் உள்ள சர்வதேச கற்கைகளுக்கான சீன நிறுவனத்தின் தலைவர் யாங் சென்ஹர், மொஸ்கோவிலுள்ள மூலோபாயக் கற்கைகளுக்கான ரஷ்ய நிறுவனத்தின் இயக்குநர், வை.கொஸோக்கின்,

நியுயோர்க்கிலுள்ள உலக கொள்கை நிறுவனத்தின் இயக்குநர் ஸ்ரிபன் ஸ்கெலெசிய்கர், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அமைதிகாப்பு மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான அலுவலகத்தின் இயக்குநர் வில்லியம் இம்ரே, முன்னாள் ஜோர்தான் பிரதமர் அப்துல் சலாம் மஜாலி, இஸ்ரேலில் உள்ள சர்வதேச தீவிரவாத எதிர்ப்புக் கொள்கை வகுப்பு நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் எலிஹார்மோன், சிங்கப்பூர் பல்கலைக்கழக பாதுகாப்பு மற்றும் மூலோபாயக்கல்வி நிறுவனத்தின் தீவிரவாத எதிர்ப்பு ஆய்வுப் பிரிவுத்தலைவர் டொக்ரர் றொகான் குணரத்ன ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இந்த மாநாட்டில், ஐக்கிய நாடுகள் சபை தற்போது சர்வதேச ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள், முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பது, முரண்பாடுகளுக்குப் பின்னரான முகாமைத்துவம், தீவிரவாதத்துக்கெதிரான சர்வதேச கூட்டுறவு, போதைப் பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றச்செயல்கள், ஐக்கிய நாடுகளும் பேரழிவு ஆயுதங்களும், போன்ற விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சிங்கவும் கலந்துகொள்வார்.

### ஜனாதிபதி - பிரதமர் இன்று...

சென்றுகொண்டிருக்கின்றது எனவும் தெரிவித்திருந்தார்.

உதவி வழங்கும் நாடுகளால் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்ட நிதியுதவிகள் கிடைக்கவேண்டுமாயின், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அரசியல் முறுகல்நிலை முடிவுகாணப்பட்டு - புலிகளுடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமென, சர்வதேச சமூகம் உறுதிபடத் தெரிவித்திருந்தது.

இதையடுத்தே அரசியல் முறுகலுக்கு முடிவுகாணவும், விடுதலைப் புலிகளுடன் 3 மாதங்களுக்குள் பேச்சுநடத்தத் தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி ரோக்கியோ நிதியுதவி தொடர்பாக, உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு ஒன்று அமெரிக்காவின் வொஷிங்ரன் நகரில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு முன்னர் அரசியல் முறுகல்நிலை தீர்க்கப்படாவிட்டால் பெரும் பிரச்சினைகளுக்கு நாடு முகங்கொடுக்கநேரிடும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதனாலேயே - ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முறுகல்நிலையைத் தீர்த்துக்கொள்ள இரண்டு தரப்புக்களும் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது. இதன் ஒருகட்டமாகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சந்தித்துப் பேசத் திட்டமிட்டிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியினதும், பிரதமரினதும் விசேட பிரதிநிதிகள் நடத்திய பேச்சுக்களையடுத்தே இன்றைய சந்திப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் பேச்சுக்களின்மூலம் இருவரும் இணைந்து செயற்படக் கூடிய நிலை உருவாகும் என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவித்தன.

கடந்தவாரம் சந்திப்பில் மனோ-மலிக் குழுவினர் இரண்டு தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்துப் பேசியிருந்தனர்.

ஜனாதிபதியுடன் இணங்கிப்போக விரும்புவதாகவும், அரசியல் நெருக்கடிநிலை அடுத்தமாதம் வொஷிங்ரனில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு முன்னதாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நடைபெறவுள்ள ஜனாதிபதி - பிரதமர் சந்திப்பையடுத்து நாளை மாலை இருதலைவர்களும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிடுவார்கள் என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்தது.



## கண்ணீர் அஞ்சலி

### திரு. ஏகாம்பரநாதன் ரவிச்சந்திரகுமார்

திரு.பாலச்சந்திரகுமார் (வீமன் போராளி) அவர்களின் அன்புச் சகோதரன் திரு.ஏகாம்பரநாதன் ரவிச்சந்திரகுமார் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

(சி-2174) தென்மராட்சி வாழ் மக்கள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.